வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 01.03.2024 வெள்ளிக்கிழமை | இதழ் : 61 | பக்கங்கள் : 12

# தலைமை உட்பட கட்சியின் சகல பதவிகளும் மீள்தெரிவு

## நீதிமன்றுக்கு தெரிவித்தது தமிழ் அரசு கட்சி

திருகோணமலை, மார்ச் 01

**இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைமை, பொதுச் செயலாளருக்கான தெரிவுகள் கட்சியின் யாப்பை மீறியுள்ளன. எனவே, யாப்பின் பிரகாரம் தலைமை உள்ளிட்ட அனைத்து நிர்வாக பதவிகளையும் மீளத் தெரிவு செய்வதற்கு தயார்.**

**இதன்மூலம் மனுதாரர்கள் கோரும் நிவாரணங்களை வழங்கத் தயாராக உள்ளதாக அந்தக் கட்சி திருகோணமலை நீதிமன்றில் உறுதியளித்தது.**

இந்த வழக்கில் எம்.ஏ. சுமந்திரனின் நிலைப்பாட்டை அறிவதற்காக ஏப்ரல் 5ஆம் திகதி வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 21 ,27ஆம் திகதிகளில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் நிர்வாக தெரிவுகளை இரத்து செய்யக்கோரி திருகோணமலையை சேர்ந்த கட்சியின் உறுப்பினர் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் இடைக்கால கட்டாணை வழங்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று மாவட்ட நீதிபதி மா. கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன் போது, நீதிமன்றில் மாவை சேனாதிராசா, சி. சிறீதரன், ச.குகதாசன், சீ. யோகேஸ்வரன் சார்பில்

11

## யாழ். வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 01

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராக முயன்ற அந்தக் கட்சியை சேர்ந்த பீற்றர் இளஞ்செழியன் என்பவர் தாக்கல் செய்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, திருகோணமலையில் நடக்கும் வழக்கு சமரசத்தை எட்டும் வாய்ப்புள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்து, திருகோணமலை வழக்கின் போக்கை அவதானிப்பதற்காக எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

## தனியார் பேருந்து சேவை இன்றுமுதல் வழமைக்கு!

யாழ்ப்பாணம், மார்ச் 01

யாழ்ப்பாணத்தில் இருந்து தூர இடங்களுக்கான சேவையில் ஈடுபடும் பேருந்துகள் இன்று முதல் வழமை போன்று - வழக்கமான இடத்தலிருந்து சேவையில் ஈடுபடும்.

இதேநேரம், தனியார் பேருந்துகளின் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காக இன்று வெள்ளிக்கிழமை குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

நேற்று வியாழக்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடந்த பேச்சின் நிறைவிலேயே இந்தத்

11



## இ. போ. ச. பேருந்துகளை தடுத்து வைத்து போராட்டம்!

### தனியார் பேருந்து சங்கம் நடத்தியது

யாழ்ப்பாணம், மார்ச் 01

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளை வெளியேற விடாமல் தனியார் பேருந்து துறையினர் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே, தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடாததால் பல்வேறு சிரமங்களுக்கு முக்கம் கொடுத்த பயணிகள், இந்தப் போராட்டத்திலும் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டனர். இந்தப் போராட்டத்தால் அந்தப் பகுதியில் முரண்டபாடுகளும் ஏற்பட்டன.

யாழ்ப்பாணம் தனியார் பேருந்துகள் மின்சார நிலைய வீதியில் நின்று பயணிப்பதற்கு

11

## சாந்தனின் நிலை சிறப்பு முகாமிலுள்ள மற்ற மூவருக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது!

### றொபேர்ட் பயஸ் உருக்கமான கடிதம்

திருச்சி, மார்ச் 01

சாந்தனுக்கு ஏற்பட்ட நிலை சிறப்பு முகாமில் உள்ள மற்ற மூவருக்கும் ஏற்பட்டு விடக் கூடாது என றொபேர்ட் பயஸ் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், கைது செய்யப்பட்ட நளினி, முருகன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், சாந்தன் ஆகியோரை கடந்த 2022 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் விடுவித்தது. இதில் நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர் இந்தியர்கள் என்பதால் அவர்கள் வீடுகளுக்கு சென்றனர்.

ஆனால், முருகன், ஜெயக்குமார், சாந்தன், ராபர்ட் பயஸ் ஆகியோர் இலங்கை குடிமக்கள் என்பதால் அவர்கள் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட னர்.

இந்நிலையில், உடல் நலக்குறைவால் சிகிச்சை பெற்று வந்த சாந்தன்

11

திலீபன் நினைவேந்தல்:

## சிவாஜிக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்தது நீதிமன்று!

கொழும்பு, மார்ச் 01

தியாக தீபம் திலீபனை நினைவேந்தினார் என்று குற்றஞ்சாட்டி பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் எம். கே. சிவாஜிலிங்கம் மீது தொடரப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்து அவரை விடுதலை செய்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.

நேற்று வியாழக்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கடந்த தவணையில், இந்த வழக்கின் ஆட்சேபனைகளை பெப்ரவரி 24ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதற்கமைவாக, சிவாஜிலிங்கத்துக்கு எதிராகக் குற்றப்பத்திரத்தில் குறிப்பிட்ட விடயங்கள்

11

## அரசமைப்பு மீறப்படுகையில் பேரவையில் அங்கம் வகிப்பதா?

### முடிவு செய்யும் தருணம் வந்துள்ளது என்கிறார் எதிர்க்கட்சி தலைவர்

கொழும்பு, மார்ச் 01

அரசமைப்பை தொடர்ச்சியாக மீறும் பேரவையில் நாம் இருக்க வேண்டுமா என்பதை தீர்மானிக்க வேண்டிய தருணம் வந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிங்கிரிய சரணகர மகா வித்தியாலயத்தில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன பகிரங்கமாக அரசமைப்பை மீறுகின்றார். புதிய பொலிஸ் மா அதிபர் நியமனத்தை

11

## 53 ஆயிரம் போதை மாத்திரை மன்னாரில் கைப்பற்றப்பட்டன

மன்னார், மார்ச் 01

மன்னார் இலுப்பைக்கடவை தடாகத்தில் புதர்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 53 ஆயிரம் போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சட்ட விரோதமான பொருட்கள் நாட்டுக்குள் வருவதை தடுக்கும் நோக்கில் கடற்படை, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் இந்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தப் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

கண்டுபிடிக்கப்பட்ட போதை மாத்திரைகள் சட்ட நடவடிக்கைகளுக்காக இலுப்பைக்கடவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. (ஐ)

மைத்திரியின் இல்ல விவகாரம்:

## அமைச்சரவை விவகாரத்துக்கு உயர்நீதிமன்று இடைக்கால தடை!

கொழும்பு, மார்ச் 01

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகித்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்திய, கொழும்பு பெஜட் வீதியில் அமைந்துள்ள இல்லத்தை, அவர் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பின்னரும் பயன்படுத்த ஏதுவாக அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கி உயர் நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் அதன் நிறைவேற்று பணிப்பாளர் பாக்கிய சோதி சரவணமுத்து தாக்கல் செய்த அடிப்படை

11

# இப்படியும் நடக்கிறது

தமிழ் அரசு கட்சியின் நீதிமன்ற வழக்குகள் அண்ணளவாக இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுவிட்டன. அதாவது கட்சி இன்னும் இரண்டு மாதங்களுக்கு அப்படியே ஓடிக்கொண்டிருக்கப் போகின்றது.

நேற்று நடந்த வழக்கில் திருகோணமலையில் தமிழ் அரசு கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்ட தகவல் வழக்காளி தரப்பை மாத்திரம் அன்றி அனைவரையுமே அதிர்ச்சியடைய வைத்திருக்கும்.

வழக்கில் கட்சி யாப்புக்கு விரோதமாக பொதுச்சபையில் அதிகளவானவர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் என்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை கட்சியின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் ஏற்றுக்கொண்டதுடன், புதிதாக தொகுதிக் கிளைகளில் இருந்து புதிய உறுப்பினர்களை தெரிவு செய்து புதிதாக அனைத்தையும் நடத்துவதற்கு தாம் தயாராக இருக்கின்றனரென கட்சியின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் மன்றில் தெரித்தபோது அனைவரும் புருவங்களை உயர்த்தியிருப்பார்கள்.

கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசாவும் பதில் பொதுச்செயலாளர் சத்தியலிங்கமுமே இந்த அனைத்துப் பிழைகளுக்கும் பொறுப்பானவர்கள் என்பதை கட்சியின் புதிய தலைவராக தெரிவாகியிருந்த சிறீதரன் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

வழக்காளி எந்தக் காரணங்களுக்காக வழக்கு தொடுத்தாரோ அந்தக் காரணங்களை ஏற்றுக்கொண்ட பின்னர், வழக்கு உடனேயே முடிவுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், எதிர்த் தரப்பாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த ம. ஆ. சுமந்திரன் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி சயந்தன் தனது தரப்பின் சில விபரங்களை தெரிவிக்க வேண்டியிருப்பதால் வழக்குக்கு தவணை இடுமாறு விடுத்த கோரிக்கையை அடுத்தே வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

இனி என்ன, இரண்டு மாதங்களுக்கு கட்சி தொடர்ந்து மாவை சேனாதிராசாவின் தலைமையில் இயங்கவிருக்கின்றது.

இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டிலிருந்து கட்சி தொடர்ந்து இறங்கு முகத்திலேயே இருந்துகொண்டிருப்பதால் இது கட்சிக்கு புதிய விடயமல்லத்தான்.

ஆனால், இது தற்காலிகமான ஒரு நெருக்கடி என்றாலும் அது விரைவாக தீர்வு காணப்படவேண்டியது என்பதற்கு அப்பால், இந்த நெருக்கடியோடு இணைந்து இதுவரை நடந்தவை பற்றியும் கட்சிக்குள் சுயவிமர்சனம் செய்து எல்லாவற்றையும் சரி செய்வதற்கும் இந்தச் சந்தர்ப்பத்தை கட்சியில் அக்கறை உள்ளவர்கள் செய்யவேண்டும்.

தமிழ் அரசு கட்சியைப் பற்றியும் அதன் எதிர்காலம் பற்றியும் இப்போது பலரும் ஆரூடம் சொல்லத் தொடங்கியிருக்கின்றனர். அவர்களுக்கு அப்படி சொல்வதற்கு உரிமை இல்லை என்று யாரும் சொல்லப்போவதில்லை. ஆனால், அப்படிச் சொல்வதற்கு முன்னால் தம்மையும் அவர்கள் திரும்பிப் பார்க்கவேண்டும்.

அண்மையில், விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஓர் அரசியல் விமர்சகர் 'சகட்டுமேனிக்கு' விமர்சித்திருந்தார். இதனைப் பற்றி சில நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது ஒருவர் சொன்னார், 'அவர் வன்னிக்குள் இருந்தபோது புலிகளின் செயல்பாட்டாளராக இருந்தவர். அப்போது இயக்கத் துக்காகப் பணியாற்றுபவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளைமே பதினாறு வரை பெற்றவர் அவர். அவர் இப்போது இப்படிச் சொல்வதற்கு எந்த அருகதையும் இல்லாதவர்' என்றார்.

இதை ஏன் இங்கே குறிப்பிட வேண்டி வந்தது என்றால், அது போலத்தான் இப்போது விமர்சிப்பவர்கள் எல்லாம் தத்தமது பழைய வாழ்க்கையை மறந்துவிடுகின்றனர் என்பதை சுட்டிக்காட்டுவதற்காகவே.

இனி இந்த பத்தியில் சொல்ல வந்த விடயத்துக்கு வருவோம்.

'தமிழ் அரசுக் கட்சியின் காலம் என்பது முடிவுக்கு வந்துவிட்டது. எங்களைப் பொறுத்த வரையில் தமிழ் அரசுக் கட்சி மிகமிக பலவீனமான சூழ்நிலைக்குள் சென்றுவிட்டது. ஆகவே, தமிழ் அரசுக் கட்சியும்கூட சுருங்கிப் போயிருக்கிறது என்பதை தமிழ் அரசுக் கட்சியில் இருக்கிறவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.' என்று ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்திருக்கிறார்.

ரெலோவில் இருந்து சிவாஜிலிங்கம், சிறீகாந்தா ஆகியோர் விலகியபோது செல்வம் தலைமையிலான ரெலோவை ஐம்பது வீத ரெலோ என்று அவர் கணிப்பிட்டிருந்தது போலத்தான் தமிழ் அரசு பற்றிய அவரது கணிப்பும் என்பது வேறு விடயம்.

தனது கட்சியை எப்படித் தூக்கி நிமிர்த்துவது என்பதைப் பற்றி சிந்திக்காமல் மற்றுமொரு கட்சியின் உள்விவகாரங்களில் தலையை நுழைப்பது அவரது அனுபவத்துக்கு சிறந்தது அல்ல.

**- ஊர்க்குருவி.**

### குருந்தூர்மலை வழக்கு:

## சிறீதரன் எம். பி உள்ளிட்டோரை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு!

முல்லைத்தீவு, மார்ச் 01

குருந்தூர்மலை விகாரைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் உள்ளிட்டவர்களை நீதிமன்றில் முற்படுமாறு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

குருந்தூர்மலையில் சைவ வழிபாட்டிடத்தை அழித்து அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக கடந்த 2022 செப்ரெம்பர் 21ஆம் திகதி மக்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட் டபோதே நீதிமன்றம் மேற்கண்ட உத்தரவை விடுத்தது.

மேலும், இந்த வழக்கில் ஆர்ப்பாட்டத்தின் பின்னர் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்ட து. ரவிகரன், இ. மயூரன் ஆகியோர் நேற்று நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

எனினும், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சி. லோகேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகவில்லை. இதையடுத்து வழக்கை எதிர்வரும் ஜூலை 25ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது. அத்துடன், அன்றைய தினம் அவர்களை முன்னிலையாகுமாறும் கட்டளை பிறப்பித்தது.

(ஐ)

## தென்னக்கோன் நியமனத்தின் மூலம் சபாநாயகர் அரசமைப்பை மீறினார்!

### தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 01

பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமித்ததன் மூலம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அரசமைப்பை மீறியுள்ளார் என்று தேசிய மக்கள் சக்தி குற்றம்சாட்டியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்த அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா இந்த விவகாரம் தொடர்பில் நீதிமன்றம் செல்வதற்குத் தமது கட்சி



தீர்மானித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

அரசமைப்பு பேரவையின் தீர்மானம் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்ட பின்னரும் சபாநாயகர் தேசபந்து தென்னக்கோனின் நியமனத்துக்கு அனுமதி வழங்கியுள்ளார். இது அரசமைப்புக்கு முரணானது - அதனை மீறும் விடயம் எனவும் குறிப்பிட்டுள்ளார். வாக்களிப்பில் சமநிலை காணப்பட்டால் தான் சபாநாயகரால் வாக்க ளிக்க முடியும்.

பொலிஸ்மா அதிபர் நியமனத்தால் பிரச்னை உருவாகியுள்ளது. உயர்நீதிமன்றம் இதற்கு தீர்வு காணும் என்றும் அவர் கூறினார். (ஐ)

### யாழ். மத்திய கல்லூரி விவகாரம்:

## அதிபரை பதவியேற்கவிடாது தடுப்பது சட்டவிரோத செயல்!

### இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 01

மத்திய கல்லூரி அதிபர் நியமனம் முறைப்படி இடம்பெற்றும் அவரை பதவியேற்க விடாமல் பதில் அதிபர் தடுப்பது சட்டவிரோதம் என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் யாழ். மத்திய கல்லூரி அதிபர் விவகாரம் தொடர்பாக யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் அதிபர் நியமனத்திலே பாதிக்கப்பட்ட அதிபரும் இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் தொடர்பில் இருக்கின்றார்கள்.

மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 2 அல்லது 3ஆக இருந்தாலும் சரியான நிலைப்பாட்டில் யார் இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் இலங்கை ஆசிரியர் சங்கம் ஆதரவை வழங்க முடியும். தனிப்பட்ட ரீதியில் எவர் சார்பிலும் நாங்கள் முடிவு எடுப்பதில்லை. இந்த விடயத்தில் நாங்கள் ஒரு கொள்கை சார்ந்த முடிவு எடுக்கின்றோம்.

யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் நியமனம் முறைப்படி இடம்பெற்றிருக்கிறது. அதிபர் நியமனம் தொடர்பில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வின் ஊடாக அதிபர் தேர்வு இடம்பெற்றிருக்கிறது. பொதுச் சேவை ஆணைக்குழுவின் உதவியோடு அந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. மத்திய கல்லூரியின் பதில் அதிபராக இருந்தவரின் நியமனம் தற்போது வறிதாக்கப்பட்டிருக்கிறது.

புதிய அதிபர் நியமனம் இடம்பெற்ற பின்னரும்கூட பதில் அதிபர் தொடர்ச்சியாக செயல்படுகிறார் என்றால் அவருக்கு பின்னால் யாரோ ஒரு தரப்பு இருக்கிறது என்பது தெட்டத் தெளிவாக தெரிகின்றது. - என்றார். (ஐ)

## மன்னார் சிறுமி கொலை; சந்தேகநபருக்கு மறியல்!

மன்னார், மார்ச் 01

மன்னாரில் 10 வயது சிறுமி வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட சம்பவத்தில் கைதான சந்தேகநபரை 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தலைமன்னார் - ஊர்மனை கடந்த 16ஆம் திகதி சிறுமியின் சடலம் மீட்கப்பட்டது. முதல்நாளிரவு அவர் காணாமல் போயிருந்தார். அவர் வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டார் என்று மருத்துவ அறிக்கை தெரிவித்தது.

இந்த நிலையில், அதே பகுதியில் தென்னந்தோப்பில் தங்கிநின்று வேலை செய்யும் திருகோணமலை குச்சவெளியை சேர்ந்த 52 வயது நபரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இவரை கடந்த 19ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்திய போது சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில், நேற்று மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போது, உயிரிழந்த சிறுமியின் தாய், தந்தை, அம்மம்மா உள்ளிட்ட 5 பேரிடம் நீதிவான் விசாரணை செய்தார்.

இதைத் தொடர்ந்து சந்தேகநபரின் விளக்கமறியலை எதிர்வரும் 7ஆம் திகதி நீடித்து உத்தரவிட்டார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
01.03.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், மாசி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# புலம்பெயர் அமைப்புகள் என்ன செய்யப்போகின்றன?

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையில், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நீதிப் பொறிமுறைக்கான பரிந்துரைகளை நிராகரிப்பதாக அறிவித்திருக்கின்றார். அதேவேளை, காஸாவில் இடம்பெற்றுவரும் யுத்தத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அதன் நம்பகத்தன்மையை இழந்துவிட்டதாகவும் தந்திரமாகக் குறிப்பிட்டிருக்கின்றார். இதன் மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகள் ஆக்கபூர்வமானவை அல்ல என்னும் வாதத்தை முன்வைத்திருக்கின்றார். இந்த நிலையில், நீதிப் பொறிமுறை தொடர்பிலான சர்வதேச அழுத்தங்களின் எதிர்காலம் என்ன? அவ்வாறான அழுத்தங்கள்மீது தொடர்ந்தும் நம்பிக்கையை வெளியிட்டுவரும் புலம்பெயர் அமைப்புகள் என்ன செய்யப் போகின்றன?

யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்கள் ஆகின்றன. இந்தக் காலத்தில் களத்திலிருந்தும் புலத்திலிருந்தும் பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. சர்வதேச அழுத்தங்களின் மூலம் இலங்கை அரசாங்கத்தை இறங்கிவரச் செய்வதே இவ்வாறான முயற்சிகள் அனைத்தினதும் அடிப்படையான வாதமாக இருந்தது.

ஆனால், இந்த அழுத்தங்களால் இலங்கை அரசாங்கத்தை அடிபணிய வைக்க முடிந்ததா என்றால் - பதிலை இப்போதும் பூச்சியத்திலிருந்தே நோக்க வேண்டியிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் தங்களை ஒரு கட்டத்துக்கு மேல் எதுவும் செய்ய முடியாது - தங்கள்மீது வலுவான அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது. இதன் காரணமாகவே ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று பதினான்கு வருடங்களின் பின்னரும் அவர்களால் கூற முடிகின்றது.

இதற்குக் என்ன காரணம்? பதில் சுலபமானது - அதாவது அரசாங்கத்தின் மீதான அழுத்தங்கள் நெருக்கடியாக மாறாத வகையில் பூட்டுப் போடுவதற்கு நாடுகள் இருக்கின்றன. ஏனெனில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் முன்வைக்கப்படும் பரிந்துரைகள் அனைத்துமே வெறும் பரிந்துரைகள் மட்டும்தான். அந்தப் பரிந்துரைகள் செயல்வடிவம் பெற வேண்டுமாயின், அதற்கு பலம்பெருந்திய நாடுகளின் ஆதரவு தேவை. ஆனால், அவ்வாறான நாடுகளோ தங்களுக்குள் பிளவுற்றிருக்கின்றன. ஒரு நாடு ஆதரிப்பதை மற்றைய நாடு எதிர்க்க முற்படுகின்றது.

இதன் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையின் முடிவுகள் பெரும்பாலும் செயல் வடிவம் பெறுவதில்லை. இலங்கை போன்ற நாடுகள் இந்தச் சூழலை, சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடியுமென்பதில் நம்பிக்கையுடன் இருக்கின்றன. இந்த நம்பிக்கை இருக்கும் வரையில் அரசாங்கம் இவ்வாறுதான் செயல்படும் - அவர்கள் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளைத் தொடர்ந்தும் நிராகரிப்பர். இதனை முறியடிக்க வேண்டுமாயின், புலம்பெயர் அமைப்புகளின் ‘லொபி’ நாடுகளை நோக்கியதாக இருக்க வேண்டும் - மாறாக, வெறுமனே ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் கூடாரமடிப்பதால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

# விதிமுறைகளுக்கு அமையவே அதிபர் நியமிக்கப்பட வேண்டும்!

## யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

*யாழ்ப்பாணம், மார்ச் 01*

கல்வி அமைச்சு மற்றும் பொதுச்சேவை ஆணைக் குழுவின் விதிகளுக்கு அமையவே அதிபர் நியமனம் இடம்பெற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு - இவ்வாறு யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் நியமனம் தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் என்பது 1909 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இன்றுவரை அந்த சங்கம் எதுவித பிரச்னையும் இன்றி தொடர்ச்சியாக இயங்கி வருகிறது.

பதில் அதிபர் பதவியேற்றதன் பின்னர், சில காரணங்களுக்காக பழைய மாணாக்கர் சங்கம் என்ற பெயரில் இன்னோர் அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்த சங்கத்துக்கும் எமக்கும் எந்த வித தொடர்பும் கிடையாது.

அவர்கள் உருவாக்கியது பழைய மாணாக்கர் சங்கம். இது கடந்த ஆறு மாதத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பாகும். இது சம்பந்தமான வழக்கு தற்போது நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகிறது.

பழைய மாணவர் சங்கத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் இவர்தான் அதிபராக வரவேண்டும் - அவர்தான் அதிபராக வரவேண்டும் என்று எந்த ஒரு நிபந்தனையும் விதிக்கவில்லை.

எங்களைப் பொறுத்தவரையில் சட்ட திட்டங்களுக்கு அமையவாக கல்வி அமைச்சினதும் பொதுச் சேவை ஆணைக்குழுவினதும் விதிகளுக்கு அமைவாக ஓர் ஒழுங்குமுறையில் தெரிவு செய்யப்பட்ட அதிபர் வரவேண்டும் என்பதேயாகும். அவ்வாறான ஒருவரை நாம் ஆதரிப்போம். அதுவே எமது நிலைப்பாடு - என்றனர். (ஐ)

# அன்னதான நிகழ்வு

*யாழ்ப்பாணம், மார்ச் 01*

மேல்மருவத்தூர் பங்காரு அடிகளாரின் 84ஆவது அவதார திருநாளை முன்னிட்டு நாடு முழுவதும் மக்கள் நல மனிதநேய தொண்டுப் பணிகளான சிரமதானம், வாழ்வாதார உதவிகள், அன்னதானம் என்பன முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன் ஓர் அங்கமாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று மதியம் அன்னதான நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஐ)

# அமைச்சர் பதவி விலகி என்ன செய்துவிடுவார்?

## மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம்

*வடமராட்சி, மார்ச் 01*

பதவியில் இருக்கும் போது எதுவும் செய்யமுடியாத அமைச்சர் பதவி விலகி என்ன செய்துவிடப் போகிறார் என்று கேள்வி யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சம்மேளனத்தின் உப தலைவர் நா. வர்ணகுலசிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

முன்னதாக, இந்திய மீனவர்கள் விவகாரத்தில் அழுத்தம் தந்தால் பதவி விலகி கடற்றொழிலாளர்களுடன் போராடுவேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# சர்வதேச மகளிர் தினம்!


*யாழ்ப்பாணம், மார்ச் 01*

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ. வாகீசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ். எம். சமன்பந்துலசேன ஆகியோர் பங்கேற்பர்.

இந்த நிகழ்வில் யாழ். பல் கலைக்கழக சட்டத் துறை தலைவர் திருமதி கோசலை மதன், சமுதாய மருத்துவநிபுணர் யோசபின் திருமகள் சிவசங்கர் ஆகியோர் சிறப்புரைகளை வழங்குவர். தொடர்ந்து கலைநிகழ்வுகள், பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் கௌரவிப்பு, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் நடைபெறவுள்ளன. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**மார்ச் - 01 வெள்ளிக்கிழமை**
**சோபகிருது வருடம் - மாசி 18**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 10.30 - 12.00**
**திதி : சஷ்டி**




**மேடம்**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்கள் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்**

சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதிகாரி முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். அமோகமான நாள்.

**மிதுனம்**

குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் இருந்த பிரச்னைகள் விலகும். கனவு நனவாகும்.

**கடகம்**

முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். பழைய கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**

குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**

குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். தடைகள் உடைபடும்நாள்.

**துலாம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். இடம் ,பொருள், ஏவல் அறிந்து செயல்படல்.

**விருட்சிகம்**

கணவன் -மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். இனிமையான நாள்.

**மகரம்**

தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்**

கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

# அனுமதி கிடைத்தும் சாந்தனை இலங்கைக்கு அனுப்பாதது ஏன்?

## தமிழக அரசிடம் உயர்நீதிமன்றம் கேள்வி

சென்னை, மார்ச் 01

சாந்தன் இலங்கை செல்வதற்கு கடந்த 22ஆம் திகதி மத்திய அரசு அனுமதியளித்தும் ஏன் அவரை அனுப்பவில்லை என்று தமிழக அரசிடம் உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான சாந்தன், சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் நேற்று முன்தினம் காலமானார். கல்லீரல்

செயலிழப்பால் பாதிக்கப்பட்ட அவர், கடந்த ஜனவரி மாதம் முதல் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

இந்தநிலையில், நோய்வாய்ப்பட்ட தனது தாயாரை கவனிப்பதற்காக தன்னை இலங்கைக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு இரண்டு நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, அரச தரப்பு சட்டத்தரணி சாந்தனை இலங்கை அனுப்பவதற்கான பணிகள் நடைபெற்று வந்த நிலையில் துரதிர்ஷ்டவசமாக நேற்று (நேற்று முன்தினம்) உயிரிழந்துவிட்டார்", என்று கூறினார்.

சாந்தனை இலங்கை அனுப்புவதற்கான அனுமதி எப்போது கிடைத்தது என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல், ஜனவரி 22ஆம் திகதி அவரை இலங்கை அனுப்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டதாகக் கூறினார்.

சாந்தனை இலங்கைக்கு அனுப்ப ஜனவரி 22ஆம் திகதியே மத்திய அரசு அனுமதி அளித்தும் ஏன் அனுப்பவில்லை என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அரசு தரப்பு வழக்கறிஞர், ஜனவரி 24ஆம் திகதி முதலே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரால் அசையக்கூட முடியவில்லை - என்று கூறினார்.

இதனையடுத்து சாந்தனின் மருத்துவ அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள் விசாரணையை ஒத்திவைத்தனர்.

# தமிழகத்திலிருந்து தி. மு. க. முற்றிலுமாக அகற்றப்படும்

## பிரதமர் நரேந்திரமோடி

திருநெல்வேலி, மார்ச் 01

மக்களவைத் தேர்தலுக்கு பிறகு தமிழகத்திலிருந்து தி. மு. க. முற்றிலும் அகற்றப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

திருநெல்வேலி - பாளையங்கோட்டையில் இடம்பெற்ற பா. ஜ. க. பொதுக் கூட்டத்தில் பேசியபோதே மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதாரத்தில் இந்தியா வேகமாக வளர்கிறது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் வெளிநாடுகளுடன் போட்டியிடுகிறது. தமிழ்நாடும் அதில் பெரிய வளர்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

தமிழக மக்கள் பா. ஜ. கவின் பின்னால் வரத் தொடங்கியுள்ளனர். டில்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே உள்ள தூரம் மிகவும் குறைந்துள்ளது. மத்திய அரசு திட்டங்களின் பலன்கள் தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் பரவியுள்ளன. பாரத தேசம் 100 மடங்கு முன்னேறினால், அதற்கு இணையாக தமிழ்நாடும் 100 மடங்கு முன்னேறவேண்டும். அவ்வாறு



முன்னேற்றுவது மோடியின் உறுதிமொழி.

தமிழக நலனுக்காக நாங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு கொடுக்காத அரசாங்கம் இங்கே நடந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசு என்ன செய்தாலும், குறை சொல்கிறார்கள். அதை மீறி மக்களுக்கு நாங்கள் நன்மை செய்து கொண்டிருக்கிறோம். இவர்கள் ஏன் நாட்டின் வளர்ச்சியை தடுக்கிறார்கள்? திட்டங்களை ஏன் தடுக்கிறார்கள்?

மக்களின் நலனைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் மாநில அரசுக்கு இருக்கிறது? இவர்கள் நாட்டைக் கொள்ளை அடிப்பதற்காகவே வளர்ச்சியை தடுக்கின்றனர். அதையெல்லாம் மீறி மக்களுக்கு திட்டங்களைக் கொண்டுவந்துள்ளோம் - என்றார். (ஐ)

*தி. மு. க. கூட்டணி:*

# கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தலா இரண்டு தொகுதிகள்!

சென்னை, மார்ச் 01

பாராளுமன்ற தேர்தலில் தி. மு. க. கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தலா இரண்டு தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் நடந்த பேச்சில் இதற்கான உடன்பாடு எட்டப்பட்டது. தொடர்ந்து தொகுதி பங்கீடு உடன்பாட்டில் தி. மு. க. தலைவரும் முதல்வருமான ஸ்டாலின் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் ஒப்பமிட்டனர்.

இரு தொகுதிகள் ஒதுக்கப்பட்டாலும் எந்தெந்த தொகுதிகள் என்பது இன்னும் முடிவாகவில்லை என்றும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பா. ஜ. கட்சியின் கூட்டணியிலேயே நாம் உள்ளோம்!

## பன்னீர்செல்வம்

சென்னை, மார்ச் 01

தேசிய கட்சியாக உள்ள பா. ஜ. க. தலைமையிலான கூட்டணியில்தான் நாங்கள் உள்ளோம் என்று கூறியுள்ளார் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம்.

பா. ஜ. க. பொதுக்கூட்டத்தில் அவர் பங்கேற்காதது குறித்து அவரிடம் செய்தியாளர்கள் கருத்து கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து, நாங்களும் பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலையும் தொடர்ந்து பேசி வருகிறோம். இதேபோல, பா. ஜ. கவில் உள்ள மேல்மட்ட தலைவர்களும் கூட்டணி குறித்தும் தொகுதி பங்கீடு குறித்தும் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறோம். தமிழகம் வந்துள்ள பிரதமர் மோடியை சந்திக்க நான் நேரம் கேட்கவில்லை. அதனாலேயே சந்திக்கவில்லை.

இது இந்தியாவை யார் ஆளப் போகிறார்கள் என்பதற் கான தேர்தல். தேசிய கட்சியாக உள்ள பா. ஜ. க. தலைமையிலான கூட்டணியில்தான் நாங்கள் உள்ளோம். பொதுக்கூட்டத்துக்கு பா.ஜ.க. அழைக்காதது குறித்து எங்களுக்கு எந்த வருத்தமும் இல்லை. இரு தரப்பிலும் மனம் விட்டு பேசிக்கொண்டிருக்கிறோம் - என்றார். (ஐ)

# சென்னைக்கு வருகிறார் பிரதமர் மோடி!

சென்னை, மார்ச் 01

எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை இந்தியப் பிரதமர் மோடி சென்னைக்கு மீண்டும் வருகை தரவுள்ளார்.

சென்னை நந்தனம் வை. எம். சி. ஏ. மைதானத்தில் பாரதிய ஜனதா சார்பில் நடத்தப்பட உள்ள பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் பங்கேற்று அவர் உரையாற்றுவார்.

இந்த பொதுக்கூட்ட ஏற்பாடு பணிகளில் தமிழக பாரதிய ஜனதா தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. மாநாட்டு பந்தல் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# சர்வதேச நாணய நிதியத்தின் 3ஆவது கட்டமும் கிடைக்கும்

## நிதி இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 01

**சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் மார்ச் 7 ஆம் திகதி முதல் சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் தவணை தொடர்பான இரண்டாவது மீளாய்வை ஆரம்பிக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**



சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் தவணை கொடுப்பனவும் பெற்றுக்கொள்ளப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது நாணய நிதியப் பிரதிநிதிகள் சுமார் இரண்டு வாரங்களில் இரண்டாவது மதிப்பாய்வை நடத்துவார்கள் என்று நம்பப்புவதாக நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

அத்துடன் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை அரசாங்கத்தின் நிதி நிலைமை மற்றும் ஏனைய உடன்படிக்கைகளை நிறைவு செய்வது தொடர்பிலான மீளாய்வும் செய்யப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இரண்டாவது மீளாய்வு நிறைவடைந்து பணியாளர் சபையின் இணக்கப்பாட்டுக்கு வந்ததன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் தவணை பெற்றுக்கொள்ளப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# நாகானந்த கொடித்துவக்கு இனிமேல் சட்டத்தரணி தொழில் செய்யத் தடை!

கொழும்பு, மார்ச் 01

சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்குவுக்கு இனிமேல் சட்டத்தரணி தொழில் செய்வதற்கு தடை விதித்து உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாகாநந்த கொடித்துவக்குவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை விசாரணை செய்த பின்னர் பிரியந்த ஜயவர்தன, பிரிதி பத்மன் சூரசேன மற்றும் எஸ். துரைராஜா ஆகிய நீதியரசர்கள் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

# கணவனுக்கு போதைப்பொருள் கொடுத்த மனைவி சிக்கினார்!


கொழும்பு, மார்ச் 01

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கணவருக்கு ஹெரோயின் போதைப்பொருளை இரகசியமாக கொடுக்க முயன்ற மனைவி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜபயாகல முலட்டியன பிரதேசத்தை சேர்ந்த குறித்த பெண் தனது கணவனுக்கு கொடுப்பதற்காகக் கொண்டு வந்த கோழி இறைச்சி பொதியை பொலிஸார் சோதனையிட்டபோதே இச்சம்பவம் அம்பலமாகியுள்ளது.

இதன்போது குறித்த பொதிக்குள் இருந்து 550 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவித்தன. (அ)

# தேசபந்து தென்னக்கோன் கடமையை பொறுப்பேற்றார்



கொழும்பு, மார்ச் 01

இலங்கையின் 36ஆவது பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நேற்று கடமைகளை பொறுப்பேற்றார்.

பொலிஸ் தலைமையகத்தில் இதற்கான நிகழ்வு இடம்பெற்றது.

கொழும்பு நாலந்தா கல்லூரியின் பழைய மாணவரான தேசபந்து தென்னக்கோன், 1998 ஆம் ஆண்டு உதவி பொலிஸ் அத்தியட்சகராக சேவையில் இணைந்தார்.

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக பதவி உயர்வு பெற்ற அவர், அதே வருடம் டிசெம்பர் மாதம் மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டார்.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் சேவையில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளதுடன் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றியுள்ளார்.

தேசபந்து தென்னக்கோன் கடந்த வருடம் நவம்பர் மாதம் 29ஆம் திகதி முதல் பதில் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றி வந்தார்.

போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்களை தடுப்பதற்காக முன்னெடுக்கப்படும் யுக்திய சுற்றிவளைப்பிற்கு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமைத்துவம் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பெரமுனவை தலைமையாக கொண்டு அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்போம்

## கூறுகின்றார் ரஞ்சித் பண்டார




கொழும்பு, மார்ச் 01

மார்ச் மாதம் 05 ஆம் திகதிக்கு பின்னர் அரசியலில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படலாம். பொதுஜன பெரமுனவை தலைமைத்துவமாக கொண்டே புதிய அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்போம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராயும் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அண்மையில் முன்னிலையாகிய திறைசேரியின் செயலாளர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோர் நிதி வங்குரோத்து நிலையை நாங்கள் அறிவிக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் வங்குரோத்து நிலைக்கு ராஜபக்ஷர்கள் பொறுப்பு கூறவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுக் கொள்கிறார்.

பொருளாதார பாதிப்புக்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்களும் கிடையாது. சர்வதேச பிணைமுறியங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்களினால் நாட்டின் நிதி நிலைமை நெருக்கடிக்குள்ளாக் கப்பட்டது.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்துக்கு மத்தியில் பொருளாதார பாதிப்பின் ஒட்டுமொத்த பொறுப்பும் ராஜபக்ஷர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. பொருளாதார பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு ராஜபக்ஷர்களை பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்பட்டன.

கட்சி என்ற ரீதியில் பலமடைந்துள்ளோம். எதிர்வரும் மார்ச் 05 ஆம் திகதிக்கு பின்னர் அரசியலில் எதிர்பாராத பல மாற்றங்கள் ஏற்படும். பொதுஜன பெரமுனவை தலைமைத்துவமாக கொண்டே புதிய அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்போம்-என்றார். (அ)

# அதிக வெப்பத்துடனான வானிலை ஏப்ரல் நடுப் பகுதி வரை நீடிக்கும்

கொழும்பு, மார்ச் 01

நிலவும் அதிக வெப்பமான வானிலை எதிர்வரும் ஏப்ரல் நடுப்பகுதி வரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.




எனவே முடிந்தவரை வெளிப்புற செயற்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு திணைக்களத்தின் பணிப்பாளர் அஜித் விஜேமான்ன தெரிவித்துள்ளார்.

காற்றின் வேகம் குறைவடைந்துள்ளமை மற்றும் வானில் முகில் கூட்டம் குறைவடைந்துள்ளமை என்பன இந்த வெப்பநிலைக்கான காரணமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமென திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்

கொழும்பு, மார்ச் 01

புத்தளம் - நாகமடு பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

எலுவாங்குளம் இறால்மடுவ பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் நேற்று முன் தினம் காலை மரக்கறி தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சிவிட்டு மின்சார இணைப்பை நிறுத்த முற்பட்டபோதே இந்த சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த புத்தளம் பதில் நீதவான், சடலத்தைப் பார்வையிட்டார்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வண்ணாத்திவில்லு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# புதிய கிராம சேவகர்களுக்கான ஆட்சேர்ப்பு நேர்காணல் மார்ச் 13, 14, 15ஆம் திகதிகளில்

கொழும்பு, மார்ச் 01

புதிய கிராம சேவை அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்காணலை மார்ச் 13, 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போதுள்ள கிராம உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2002 கிராம உத்தியோகத்தர்கள் மிக விரைவாக அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.



புத்தளம் வனாத்தவில்லுவ பிரதேச செயலகப் பிரிவில் நிலவும் கிராம உத்தியோகத்தர்களின் பிரச்னைகளை ஆராயும் விசேட கலந்துரையாடலில் நேற்று முன் தினம் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, 2023 டிசெம்பர் 02 அன்று நடைபெற்ற கிராம அலுவலர் தேர்வில் தேர்ச்சி பெற்ற 4232 பேர் நேர்காணலில் கலந்துகொள்வதுடன், நேர்காணல் தொடர்பான கடிதங்கள் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். (அ)

# 100 மில்லியன் ரூபா நட்ட ஈடு கோரும் கெஹலிய ரம்புக்வெல!

## நியாயமற்ற கைதுக்கு எதிராக மனு தாக்கல்

கொழும்பு, மார்ச் 01

**நியாயமான காரணமின்றி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தன்னைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்ததன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பு வழங்கி 100 மில்லியன் ரூபா நஷ்டஈட்டை தனக்குப் பெற்றுத் தருமாறு கோரி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சட்டத்தரணிகள் ஊடாக மனுத் தாக்கல் செய்துள்ளார்.**



இது தொடர்பில் நேற்று உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை அவர் தாக்கல் செய்தார்.

சட்டத்தரணி சனத் விஜேவர்தன தாக்கல் செய்த மனுவில் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர், குற்றப் புலனாய்வு திணைக்கள பணிப்பாளர் உள்ளிட்டோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தரக்குறைவான மருந்துகளை இறக்குமதி செய்த விவகாரம் தொடர்பில் மனுதாரர் கெஹலிய ரம்புக்வெல, கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகிய பின்னர் கைது செய்யப்பட்டிருந்தார். (அ)

# இந்தியா-ரஷ்யா கூட்டு முயற்சியுடன் மத்தள விமான நிலையம் செயற்படும்

கொழும்பு, மார்ச் 01

மத்தள விமான நிலையத்தை இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தனியார் கூட்டு முயற்சியுடன் ஒழுங்குபடுத்துவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இதற்கான யோசனை எதிர்வரும் வாரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என துறைமுகம், கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் நிறுவனங்கள் கூட்டிணைந்து மத்தள விமான நிலையத்தின் ஒழுங்குப்படுத்தல் பணிகளை முன்னெடுக்கவுள்ளதாக துறைமுகம்,கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ்.ருவன்சந்திர குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்தள விமான நிலையத்தின் அபிவிருத்தி மற்றும் ஒழுங்குப்படுத்தல் பணிகளை முன்னெடுப்பதற்கு இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தனியார் நிறுவனங்கள் முன்னிலையாகியுள்ளன.

இந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்துடன் பலமுறை மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களை தொடர்ந்து இந்த தீர்மானம எடுக்கப்பட்டதுடன், கலந்துரையாடல் வெற்றி பெற்றுள்ளதுர்.

அத்துடன் இந்தியா- ரஸ்யா கூட்டு ஒழுங்குப்படுத்தல் ஊடாக கிடைக்கப் பெறும் இலாபத்தின் ஒரு பகுதியை இலங்கைக்கு பெற்றுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (அ)

# ரயில் பெட்டிகளின் மின்விசிறி திருட்டு

## ரயில்வே ஊழியர் கைது

கொழும்பு, மார்ச் 01

மாளிகாவத்தை ரயில்வே தரிப்பு பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில் பெட்டிகளின் மின்விசிறிகளை திருட முயன்ற ரயில்வே திணைக்கள ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் குடாபலுகஸ்வெவ பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளால் இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போதே சந்தேக நபர், திருடிய ரயில் பெட்டிகளின் மின் விசிறிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பல காலமாக ரயில் பெட்டிகளின் மின்விசிறிகளை திருடி வந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# கார் கொள்ளை; இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 01

வாடகை வாகன சேவை நிலையமொன்றில் இருந்து கார் ஒன்றை வாடகைக்கு எடுத்து கார்ச் சாரதிக்கு மதுபானம் அருந்த கொடுத்து காரை கொள்ளையிட்டுச் சென்ற இருவர் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மத்தேகொடை மற்றும் கிரிவத்துடுவ பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர்.

கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர்கள் இருவரும் முல்லேரியா பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 5,911 மில்லிகிராம் நிறையுடைய ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சதுப்புநில மறுசீரமைப்புக்கான ஐ.நா. விருதை வென்ற இலங்கை



கொழும்பு, மார்ச் 01

தமது சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளை புனரமைப்பதிலும் புத்துயிர் பெறுவதிலும் முன்னுதாரணமான பணிகளுக்காக இலங்கை 2024 ஐ.நா.வின் உலக மறுசீரமைப்பு முதன்மைக் குழுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் காலநிலை மாற்ற அலுவலகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அனில் ஜாசிங்க மற்றும் வயம்ப பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் செவ்வந்தி ஜெயக்கொடி ஆகியோர் கென்யாவின் நைரோபியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் சபையில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த விருதை ஏற்றுக்கொண்டனர்.

அவர்களுடன் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்தன மற்றும் தூதுவர் வேலுப்பிள்ளை கணநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2024 ஆண்டு இலங்கைக்கு ஐ.நாவினால் உலக மீள்காடாக்களில் அங்கீகரிக்கப்பட்ட மிகச் சிறந்த அடைவை அடைந்துள்ளது, இது நாட்டின் கண்டால் தாவர சூழலின் மீளுருவாக்கப் பெரும் முயற்சிகளுக்கான அங்கீகாரமாக பார்க்கப்படுகிறது.

இந்த விருது, கண்டல் சுற்றுச்சூழல் மறுசீரமைப்புக்கான ஐ.நா.வின் கொள்கைகளை திறம்பட பயன்படுத்துவதைக் குறிக்கிறது. அதே நேரத்தில் உலகளவில் குறிப்பிடத்தக்க சிறந்த மீளுருவாக்கல் நடைமுறைகள் மற்றும் வழிமுறைகளினூடாக எதிர்கால வெற்றிக்கு பங்களிக்கும் கட்டமைப்பு சாத்தியாக்கூறாக அமைகிறது. (அ)

# இந்து சமுத்திரத்தின் கப்பல் போக்குவரத்து பாதுகாப்பை இலங்கை உறுதிப்படுத்தும்!

## இந்து சமுத்திர பாதுகாப்பு மாநாட்டில் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 01

அதிகார மோதல்கள் இன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் இந்து சமுத்திரத்தின் கப்பல் போக்குவரத்துச் செயற்பாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலான மூலோபாய நிலைப்பாடுகளை பேணுவதில் இலங்கை அர்பணிப்புடன் இருக்குமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடல்சார் செயற்பாடுகளின் சுதந்திரத்திற்காக இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாலேயே செங்கடல் பாதுகாப்பு முன்னெடுப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்க இலங்கை முன்வந்திருப்பதாகவும், ஆறு நாள் யுத்தத்தின் விளைவாக சுயஸ் கால்வாய் மூடப்பட்டதால் கொழும்பு துறைமுகத்திற்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்தும் அறிவுறுத்தினார்.

அதனால் வரையறைகள் அற்ற கப்பல் போக்குவரத்துச் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டியது அவசியம் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பாத் பைண்டர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்து சமுத்திர பாதுகாப்பு மாநாட்டின் மூன்றாவது கட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

அங்கு ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்-

ஒரே தடம் - ஒரே பாதை வேலைத்திட்டம் அல்லது இந்து - பசுபிக் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்து சமுத்திரத்தை பார்க்க முடியாது. இந்து சமுத்திரம் தற்காலத்தில் உலக மூலோபாய அரசியல் வலயமாக மாறியுள்ளது. கடந்த 5 - 6 வருடங்களிலேயே அது நிகழ்ந்துள்ளது. இதுவரையான நிகழ்வுகளில் அதனை நாம் உறுதிப்படுத்த முடியும்.

அதேபோல் இந்திய உலகின் மிகப்பெரிய பொருளாதாரத்தை கொண்ட நாடாக உருவெடுக்கப்போகிறது. 21 ஆவது நூற்றாண்டின் இறுதி வரையிலும் இந்தியாவின் வர்த்தக சந்தை விரிவடையும் என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்வர். இந்துனேசியாவும் மிகப்பெரிய பொருளாதார முன்னேற்றத்தை நோக்கிச் செல்கிறது.

அதன்படி இந்து சமுத்திய வலயம் தற்போது எழுச்சி காணும் பொருளாதார வலயமாக மாறியுள்ளது. இந்த நிலைமைக்கு மத்தியில் அதிகார மோதல்கள் அற்ற இந்து சமுத்திரத்தின் கப்பல் செயற்பாடுகளின் சுதந்திரத்தை மூலோபாய நிலைப்பாட்டிற்காக இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படும்- என்றார். (அ)

# இரு சிறுவர் துஷ்பிரயோகம் தேரர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, மார்ச் 01

இரண்டு சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் தேரர் ஒருவர் ஹோமாகம தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மந்திரங்கள் மூலம் நோய்களைக் குணப்படுத்துவதாக கூறப்படும் தேரர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் 13 வயதுடைய இரட்டை சிறுவர்களாவார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இந்த இரு சிறுவர்களில் ஒருவர் சுகயீனமடைந்துள்ள நிலையில் அவர்களது பெற்றோர் அந்த சிறுவனை வைத்தியத்துக்காக குறித்த தேரரிடம் அழைத்துச் சென்றுள்ளனர்.

சுகயீனமடைந்துள்ள சிறுவனை குணப்படுத்த விசேட பூசைகள் நடத்த வேண்டும் என கூறிய தேரர், சிறுவனை தன்னுடன் தங்க வைத்துக் கொண்டார்.

இந்நிலையில் இரட்டைச் சிறுவர்களில் மற்றைய சிறுவனும் சுகயீனமடைந்த நிலையில் குறித்த தேரர் சிறுவனின் வீட்டுக்குச் சென்று அந்த சிறுவனையும் தன்னுடன் காரில் அழைத்துச் சென்றுள்ளார்.

இதன்போது இந்த தேரர் இந்த இரட்டைச் சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சந்தேக நபர் ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் 5 இலட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (அ)

# பிள்ளைகளை தேடி அலையும் தாய்களின் ஒட்டுமொத்த குறியீடு சாந்தனின் தாயார்!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 01

**இந்திய மற்றும் ஏனைய நாடுகளின் சிறைகளிலும் தடுப்புமுகாம்களிலும் ஆயிரக்கணகானோர் தடுத்துவைக் கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களாக்கப்பட்டும் இருக்கையில் அவர்களை தேடி அலையும் எம் தேச தாய்மார்களின் அவலத்தின் ஒட்டுமொத்த குறியீடாக சாந்தன் அவர்களின் தாயார் இருக்கிறார் என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

33 வருடம் இந்திய மண்ணில் தனிமை சிறையில் போதிய மருத்துவ வசதிகள் அடைக்கப்பட்டிருந்த சாந்தன் நீதிமன்றால் விடுவிக்கப்பட்ட பின்னரும் இந்திய சிறிலங்கா அரசுகளின் மெத்தனப்போக்கால் ஒன்றரை வருடம் அடைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் காலமானார் எனும் செய்தி எம்மக்கள் அனைவரையும் தாங்கொணா துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

33 வருடங்களுக்கு பின்னர் தன் மகனின் முகத்தை காணும் ஏக்கத்தில் காத்திருந்த அவரின் தாயார் மற்றும் குடும்பத்தவர்களின் துயரினை எந்த வார்த்தைகளும் ஆற்றுப்படுத்தப்போவதில்லை.

அவரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் இணைந்து கொள்கிறோம்.

கொடிய இன அழிப்புபோரினால் சிறிலங்கா இந்திய மற்றும் ஏனைய நாடுகளின் சிறைகளிலும் தடுப்புமுகாம்களிலும் ஆயிரக்கணகானோர் தடுத்துவைக் கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களாக்கப்பட்டும் இருக்கையில் அவர்களை தேடி அலையும் எம் தேச தாய்மார்களின் அவலத்தின் ஒட்டுமொத்த குறியீடாக சாந்தனின் தாயார் இன்று இருக்கிறார்.

இனியாவது தடுத்துவைக் கப்பட் டவர்களினதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களினதும் விடுதலைகள் துரிதப்படுத்தப்படவேண்டும்-என்றார். (அ)

# கல்வி அமைச்சு, பொதுச்சேவை ஆணைக்குழு விதிகளுக்கமைய அதிபர் நியமனம் வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 01

கல்வி அமைச்சு மற்றும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் விதிகளுக்கு அமையவே அதிபர் நியமனம் இடம்பெற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் நியமனம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும்போதே மேற்கண்டவாறு பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அவர்கள்மேலும்கூறுகையில்:-

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் என்பது 1909ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

இன்று வரை அந்த சங்கம் எதுவித பிரச்னையும் இன்றி தொடர்ச்சியாக இயங்கி வருகிறது.

புதிய பதில் அதிபர் பதவியேற்றதன் பின்னர், சில காரணங்களுக்காக பழைய மாணாக்கர் சங்கம் என்ற பெயரில் இன்னொரு அமைப்பு உருவாக்கப்பட்டது.

அந்த சங்கத்துக்கும் எமக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. அவர்கள் உருவாக்கியது பழைய மாணாக்கர் சங்கம். இது கடந்த ஆறு மாதத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பாகும். இது சம்பந்தமான வழக்கு கூட தற்பொழுது நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகிறது.

பழைய மாணவர் சங்கமாகிய நாங்களே தற்பொழுது புதிதாக உருவாக்கப்பட்ட பழைய மாணாக்கர் சங்கத்துக்கு எதிராக வழக்கினை தாக்கல் செய்துள்ளோம்.

பழைய மாணவர் சங்கத்தை பொறுத்தவரையில் நாங்கள் இவர்தான் அதிபராக வரவேண்டும். அவர்தான் அதிபராக வரவேண்டும் என்று எந்த ஒரு நிபந்தனையும் விதிக்கவில்லை.

எங்களைப் பொறுத்தவரை சட்ட திட்டங்களுக்கு அமையவாக கல்வி அமைச்சினதும் பொதுச் சேவை ஆணைக்குழுவினதும் விதிகளுக்கு அமைவாக ஓர் ஒழுங்குமுறையில் தெரிவு செய்யப்பட்ட அதிபர் வரவேண்டும் என்பதேயாகும்.

அவ்வாறான ஒருவரை நாம் ஆதரிப்போம். அதுவே எமது நிலைப்பாடாகவும் இருக்கிறது -என்றனர். (அ)

# சாந்தனின் மரணத்துக்கு இந்திய, இலங்கை அரசுகளும் தமிழ் தலைமைகளுமே பொறுப்பு

## குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 01

சாந்தனின் மரணத்திற்கு இந்திய, இலங்கை அரசுகளும் தமிழ் தலைமைகளுமே பொறுப்பேற்க வேண்டும் என குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு. கோமகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை நல்லிணக்க அடிப்படையில் ஒரே இரவில் பேச்சு வார்த்தை மூலம் விடுதலை செய்ய முடியும் என்றால் ஏன் சாந்தனை உடன் விடுதலை செய்ய முடியாமல் போனது எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்தோடு இலங்கையில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

# ஆவணக்காட்சிப் பெட்டகத்துக்கான பாரம்பரிய பொருட்களை கோரும் யாழ். மாவட்ட செயலகம்!

யாழ்ப்பாணம், மார்ச் 01

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஆவணக்காட்சிப் பெட்டகத்துக்கான பாரம்பரியப் பொருட்களை வழங்குமாறு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அழிவடைந்து செல்லும் மரபுரிமைசார் பாரம்பரியங்களைப் பாதுகாத்து. அழிவும் திரிபுமின்றி அடுத்த தலைமுறைக்கு கையளிக்கும் வரலாற்றுக்கடமையை மேற்கொள்ளும் முகமாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஆவணக்காட்சிப் பெட்டகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பழமையும் பெருமையும் மிக்க எம் பண்பாட்டு அம்சங்களை பாதுகாப்பாகப்பேணல் மற்றும் காட்சிப்படுத்தல் செயல்பாட்டை திறம்பட மேற்கொள்ள இதுவரை தங்களால் பாதுகாக்கப்பட்டு வந்த பாரம்பரியம் மிக்க பாவனைப்பொருட்கள், அணிகலன்கள், ஏட்டுச்சுவடிகள், புராதன நூல்கள் என்பவற்றை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஆவணக்காட்சிப் பெட்டகத்திற்கு இலவசமாக வழங்கி உதவுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன், பாரம்பரியப் பொருட்களை வழங்கியவர்கள் தொடர்பான விபரங்கள் ஆவணப்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்- என்றுள்ளது. (அ)

# எங்களின் கூட்டணியில் சஜித்தும் இணையலாம்

## ஐ.தே.க. செயலர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 01

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட அமைக்க இருக்கும் பரந்துபட்ட கூட்டணியில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பலரும் எம்முடன் இணைந்து கொள்ள இருக்கின்றனர். அதன் பிரகாரம் காப்போக்கில் சஜித் பிரேமதாசவும் இணைந்து கொள்ள இடமிருக்கிறது என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி தேர்தலை இலக்குவைத்து மேற்கொள்ள இருக்கும் ஆரம்ப கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி குருநாகலில் நடத்த இருக்கிறோம். இதில் அரசியல் கட்சிகளை சேர்ந்த பலர் எம்முடன் கைகோர்க்க இருக்கின்றனர். அதனைத்தொடர்ந்து நாங்கள் ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களை மேலும் தீவிரப்படுத்த திட்டமிட்டிருக்கிறோம்.

அதேநேரம் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கூட்டணி அமைக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. 80 இற்கும் மேற்பட்ட அமைப்புகள் எங்களுடன் கலந்துரையாடி இருக்கின்றன. அவர்கள் அனைவரும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க இணக்கம் தெரிவித்திருக்கின்றன.அதேபோன்று சிவில் அமைப்புக்கள் பல சிறிகொத்த தலைமையகத்தில் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து கலநதுரையாடிய



போது தங்களின் ஆதரவை வழங்குவதாக தெரிவித்துள்ளன.

மேலும் ஜனாதிபதி தேர்தலில் நாங்கள் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்துக் கொண்டு பரந்தளவிலான கூட்டணி அமைத்தே போட்டியிட தீர்மானித்திருக்கிறோம். அது தொடர்பான கலந்துரையாடல்களும் தற்போது இடம்பெற்று வருகின்றன. அனைத்து அரசியல் கட்சிகளுடனும் நாங்கள் கலந்துரையாட எதிர்பார்க்கிறோம். எமது கூட்டணியில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பலரும் இணைந்து கொள்வார்கள். எதிர்காலத்தில் சஜித் பிரேமதாசவும் எம்முடன் இணைந்துகொள்வார் என எதிர்பார்க்கிறோம்-என்றார்.

# இலங்கை-இந்திய மீனவர்கள் பிரச்னை; இணக்கப்பாட்டுடன் பேச்சுக்குத் தயார்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 01

இலங்கை-இந்திய மீனவர்களின் பிரச்னை தொடர்பாக இணக்கப்பாட்டுடன் பேசுவதற்கு தயார் என தமிழ்நாட்டு மீன்வளத்துறை அமைச்சருக்கு தெரிவித்ததாக இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்குப் பயணம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இதன்போது இலங்கை-இந்திய மீனவர்கள் பிரச்னை தொடர்பிலான இரு நாட்டு அரசின் பேச்சுக்கள் தொடர்பில் முன்னேற்றம் ஏதும் இருக்கிறதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

என்னுடன் தமிழ்நாட்டு மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தொலைபேசியில் பேசி இருந்தார். இந்த பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணவேண்டும் என்றார்.

அவர்கள் தமிழ்நாட்டு முதலமைச்சருடன் கலந்துரையாடுவதாகவும் அவர் ஊடாக பாண்டிச்சேரி முதலமைச்சருடன் கலந்துரையாடுவதாகவும் எனக்கு சொல்லப்பட்டது.

அதேநேரத்தில் என்னையும் அந்த கலந்துரையாடலுக்கு நேரில் அல்லது தொலைபேசியில் கலந்நு கொள்ள முடியுமா என்று கேட்கப்பட்டதற்கு நான் அதற்கு இணங்கியுள்ளேன்.

எனக்கு அவர்கள் உத்தரவாதம் தரவேண்டும். இழுவைமடி படகுகள் எங்கள் கடலுக்குள் வந்து வளங்களை சுறண்டுகின்ற, அழிக்கின்ற, எங்கள் கடற்தொழில் மக்களின் வாழ்வாதாரத்தை சீரழிக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என்ற உத்தரவாதத்தினை தருவார்களாக இருந்தால் நான் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு தயாராக இருக்கின்றேன் இது தான் பேச்சுக்கான அடிப்படை-என்றார். (அ)

# பூர்வீக காணியை கபளீகரம் செய்ய யாரையுமே அனுமதிக்கமாட்டோம்!

## பொத்துவில் பிரதேச செயலகம் முன் தமிழ் , சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம்





அம்பாறை, மார்ச் 01

**“பொத்துவில் பிரதேசத்தில் இருக்கின்ற எமது பூர்வீக காணிகளை எமது உயிர் போனாலும் யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டோம். மூவினத்துக்கும் பொதுவான பிரதேச செயலாளர் நீதியாக நடக்கவேண்டும்.”**

**-இவ்வாறு பொத்துவில் பிரதேச செயலகம் முன் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழ் சிங்கள மக்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர்.**

**இந்த முற்றுகையும் ஆர்ப்பாட்டமும் நேற்று முன்தினம் இடம் பெற்றது.**

அங்கு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் பிரதி தவிசாளர் பெருமாள் பார்த்திபன், பொத்துவில் உப விகாரதிபதி உத்தலமட்ட ரத்ன பிரிய தேரர், இலங்கை தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணி துணைச்செயலாளர் அருள். நிதாஞ்சன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சுபோதரன் உள்ளிட்ட குழுவினர் அங்கு சமூகளித்திருந்தனர்.

500க்கும் மேற்பட்ட தமிழ் சிங்கள மக்கள் அங்கு கூக்குரல் இட்டவண்ணம் குழுமியிருந்தனர்.

பிரதேச செயலாளர் ஏ.எல். பிர்னாஸ், உதவி பிரதேச செயலாளர் பி.இராமக்குட்டி மற்றும் அதிகாரிகள் வாசல் அருகே நின்று ஆர்ப்பாட்டம் நடத்திய மக்களின் பிரதிநிதிகளை மாத்திரம் உள்ளே அழைத்து கலந்துரையாடினர்.

அப்போது முன்னாள் பிரவி தவிசாளர் பெருமாள் பார்த்திபன் கூறுகையில்-

பொத்துவில் கோமாரி பிரதேசத்தில் இதுவரை செயயப்பட்டு வந்த சேனைப் பயிர்ச் செய்கை அனைத்தும் கைவிடப்படும் நிலையில் இருக்கின்றது.

கோமாரி பிரதேசத்தில் யுத்தத்தின் போது எரிக்கப்பட்ட வீடுகளினுள் இருந்த காணி உரிமை பத்திரம் பர்மிட் அனைத்தும் எரிந்தன.

புதிய பத்திரம் வழங்குவதாக பிரதேச செயலாளர் அறிவித்தார். அதற்கமைவாக இருநூறு 300 பேர் விண்ணப்பித்னர்.

ஆனால் இதுவரை எவருக்குமே அந்த பத்திரம் கிடைக்கவில்லை.

கனகர் கிராமம் என்பது தமிழர்களின் பூர்வீக கிராமம். பல வருட போராட்டத்தின் பின்பு அண்மையில் 73 பேருக்கு மாத்திரம் காணி உரிமை பத்திரம் வழங்கப்பட்டது. ஆனால் அது கல் போட்டு அதனை எல்லைப் படுத்தவில்லை. இதனால் வீதி எங்குள்ளது? காணி எங்குள்ளது என்பது தெரியாமல் மக்கள் அலைகின்றனர் .

கிணறு வெட்ட அனுமதி கேட்டால் அதனை மறுக்கிறார்கள் . தடுக்கிறார்கள்.அங்கு பொதுவாக குடில் அமைத்து அதில் கூட்டம் கூடினால்

தடுக்கிறார்கள் . எனவே அதை சீர் செய்து எஞ்சிய ஏனையவர்களுக்கும் அந்த காணியை வழங்க வேண்டும். அடுத்து பிரதானமான பிரச்னை 2015இல் மைதான காணிப்பிரச்னை உருவானது.

இது காலகாலமாக எமது ஆலயங்களுக்கு எமது முன்னோரால் அந்த வட்டி வயல் எமக்கு அளிக்கப்பட்டது. ஆனால் ஒரு சில முஸ்லிம் இளைஞர்கள் சேர்ந்து எங்களுக்கு மைதானம் வேண்டும் என்று கோஷம் இடுகின்றனர். இதை சில அரசியல்வாதிகள் பின்புலத்தில் இருந்து தூண்டுகின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்பிறந்த. தமிழ் முஸ்லீம் இளைஞர்களை தூண்டுவதற்கு இதனை பயன்படுத்துகின்றனர்.

ஏதோ ஒரு அரசியல் சக்தி உங்களையும் நீதியாக வேலை செய்யவிடாமல் தடுக்கிறது என்று எண்ணவேண்டி இருக்கின்றது.

உங்களிடம் நீதி கேட்டு இருக்கின்றோம். உங்களிடம் காணியதிகாரம் இருக்கிறது. மூவினத்திற்கும் பொதுவான அதிகாரி நீங்கள். நீதியாக செயல்படவேண்டும். தாமதிக்காமல் எமக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

இழுத்து அடிக்கப்படுகின்ற நீதி மறுக்கப்பட்ட நீதியாகும். இல்லாவிட்டால் அடுத்த கட்ட செயற்பாட்டிலா நாங்கள் இறங்க வேண்டி வரும்-என்றார்.

அங்கு பொத்துவில் பிரதேச செயலாளர் பிர்னாஸ் பதிலளிக்கையில்-

நாங்கள் யாரையும் கிணறு வெட்ட வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அவர் அந்த உரிய முறைப்படி காணி உரிமத்துடன் விண்ணப்பிக்கின்ற பொழுது அதனை பார்த்து நாங்கள் செய்வோம்-என்றார்.

இடையில் குறுக்கிட்ட நிதான்சன், ஜனவரி 12ஆம் தேதி கந்தையா கோபால் மு. ஆறுமுகம் ஆகியோர் கிணறு கட்ட விண்ணப்பித்திருந்தனர். ஆனால் இதுவரைக்கும் அந்த விண்ணப்பத்திற்கு பதில் அளிக்கவில்லை என்று சொன்னார்.

மீண்டும் பிரதேச செயலாளர் கூறுகையில்..

கனகர் கிராம பிரச்னை காணி ஆணையர் அனுமதி பெற்று வழங்கப்படுகின்றது. இரண்டாம் கட்டமாக தற்பொழுது மாகாண காணி ஆணையாளர் அனுமதி பெற்று அதனை வழங்குவோம். யாருக்கும் அநீதி இழைக்கப்பட மாட்டாது.

வட்டிவயல் காணி 17ஏக்கர் காணி. அதனை மைதானத்திற்கு தேவை என்று ஒரு சாரார் கேட்கின்றனர். நீங்கள் ஆலய காணி என்கிறீர்கள். நாங்கள் மாவட்ட செயலாளருக்கு இது தொடர்பாக அறிவித்திருக்கின்றோம். அவரது பதில் வந்ததும் அதன்படி செயற்படுவோம்.

யாருக்கும் அநீதி இழைக்கப்பட மாட்டாது. அடுத்து ஊரணி சரஸ்வதி வித்தியாலய காணி உரிய காலத்தில் வழங்கப்படும்-என்றார். (அ)

# மாணவர்கள் கௌரவிப்பு



அக்கரைப்பற்று, மார்ச் 01

அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை அக். நிலாமியா ஜூனியர் பாடசாலையின் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரிட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எப்.நழிம் தலைமையில் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

“மணி மகுடம் சூடும் நிலாமியாவின் நித்திலங்கள்” எனும் தலைப்பில் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களையும் அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் இந் நிகழ்வுக்கு அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ், பிரதம அதிதியாகவும் முன்னாள் ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.எம்.காசிம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.அஹமட் கியாஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், பாடசாலையின் அபிவிருத்திச் சங்க செயலாளர் சட்டத்தரணி ஐ.முனாஸ், முன்னாள் அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ஏ.சி.இமாமுத்தீன் நிலாமியா பௌண்டேஷன் தலைவர் ஏ.ஜி.முபாறக் உட்பட பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# சமூக சீர்கேடுகளை தடுக்கும் விழிப்புணர்வு வேலைத்திட்டம்




அம்பாறை, மார்ச் 01

பாலமுனை ஜும்மா பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் அட்டாளச்சேனை பிரதேச சபை மற்றும் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம் என்பன இணைந்து போதைப் பொருள் பாவனை மற்றும் சமூக சீர்கேடுகளை தடுக்கும் முகமாக விழிப்புணர்வு வேலைத்திட்டமொன்று பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாலமுனை பெரிய பள்ளிவாசல் தலைவர் எம்.ஏ.ஏ அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள். அட்டாளைச்னை பிரதேச சபை செயலாளர். கிராம உத்தியோகத்தர்கள், அதிபர்கள் அரசியல் பிரமுகர்கள் சமூக மட்ட அமைப்புகளின் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பாலமுனை பிரதேசத்திலுள்ள மைதானங்கள், கடற்கரையோரங்கள், வயல்வெளிகள் போன்ற பொது இடங்களில் குழுவாக போதைப்பொருள் பாவணை, சூதாட்டம் போன்ற சமூக சீர்கேடுகளை ஏற்படுத்தும் சம்பவங்களை முற்றாக தடுக்கும் முகமாக இத்திட்டம் பாலமுனை பிரதேசத்தில் முதல் முதலாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ)

# கோபாலரெத்தினத்திற்கு பாராட்டு!



காரைதீவு, மார்ச் 01

கிழக்கு மாகாண பொது சேவை ஆணை குழுவின் முன்னாள் செயலாளரும், இந்நாள் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான கிழக்கின் மூத்த நிர்வாக சேவை அதிகாரி கலாநிதி.எம் கோபால ரெத்தினத்திற்கு பாராட்டு விழா நேற்று இடம் பெற்றது.

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் ஏ. மன்சூர் தலைமையில் அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது .

இரண்டு வருட காலம் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பணியாற்றிய கோபாலரெத்தினத்திற்கு அங்கு பொன்னாடை போர்த்தி பாராட்டு விழா இடம்பெற்றது.

அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தார்கள். (அ)

# காஸா பலி எண்ணிக்கை 30 ஆயிரத்தை தாண்டியது!

## பட்டினியாலும் மரணங்கள்



ஜெருசலேம், மார்ச் 01

**இஸ்ரேலுக்கும் ஹமாஸ் இயக்கத்துக்கும் இடையில் யுத்தம் ஆரம்பித்த பின்னர் காஸாவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 30,000 ஐ கடந்துள்ளது.**

இஸ்ரேலில் ஹமாஸ் இயக்கம் கடந்த ஒக்ரோபர் 7 ஆம் திகதி நடத்திய தாக்குதல்களையடுத்து, பலஸ்தீனத்தின் காஸா பிராந்தியம் மீது இஸ்ரேலியப் படைகள் கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இந்நிலையில், இத்தாக்குதல்கள் ஆரம்பித்த பின்னர் காஸாவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 30,000 ஐ கடந்துள்ளது என காஸாவிலுள்ள சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை 30,035 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 70457 பேர் காயமடைந்துள்ளனர் என அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, காஸாவின் அல் ஷிபா நகரிலுள்ள வைத்தியசாலையில், மந்தபோஷாக்கு, நீரிழப்பு மற்றும் பட்டினி காரணமாக 6 சிறார்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் அவ்வமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் மரணங்களைத் தடுப்பதற்காக சர்வதேச ஸ்தாபனங்கள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் காஸா சுகாதார அமைச்சின் பேச்சாளர் அஷ்ரப் அல் குத்ரா கோரியுள்ளார். (அ)

# டொனால்ட் ட்ரம்ப் கோரிக்கைக்கு செவி சாய்த்தது உயர் நீதிமன்றம்!



நியூயோர்க், மார்ச் 01

கடந்த 2020 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை முன்னாள் மாற்றியமைக்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டிலிருந்து டொனால் ட்ரம்பை விடுவிக்கக் கோரி தாக்கல் செய்த மனுவினை விசாரிப்பதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதிக்குரிய சிறப்புரிமையின் பிரகாரம் குறித்த வழக்கினை தள்ளுபடி செய்யக் கோரி ட்ரம்ப்பின் சட்டத்தரணிகள் மனுத்தாக்கல் செய்திருந்த நிலையில் இத் தீர்மானம் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் டொனால்ட் ட்ரம்ப் களமிறங்கப் போவதாக செய்திகள் வெளியாகிவரும் நிலையிலேயே உயர்நீதிமன்றத்தின் இத் தீர்மானம் கவனத்தை ஈர்த்துள்ளது. (அ)

# அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரும் காட்டுத் தீ

## அணு ஆயுத நிலைய செயற்பாடு நிறுத்தம்



நியூயோர்க், மார்ச் 01

வேகமாகப் பரவிவரும் டெக்சாஸ் காட்டுத் தீ, குடியிருப்பாளர்களை வெளியேற்றம் செய்ய கட்டாயப்படுத்தியுள்ளது. வீடுகள் மற்றும் வணிகங்களுக்கான மின்சாரத்தை துண்டித்து ஒரு அணு ஆயுத நிலையத்தில் செயல்பாடுகளை நிறுத்தியது.

டெக்சாஸ் வரலாற்றில் இரண்டாவது பெரிய தீப்பரவலாக கருதப்படும் இது, அமரில்லோ நகருக்கு வடக்கே 850,000 ஏக்கர் நிலத்தை தீக்கிரையாக்கியுள்ளது.

டெக்சாஸ் ஆளுநர் கிரெக் அபோட் 60 மாவட்டங்களுக்கு பேரிடர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

காய்ந்த புற்கள், அதிக வெப்பநிலை மற்றும் பலத்த காற்று ஆகியவை தீப்பொறியை தூண்டியுள்ளன.

கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான ஹட்சின்சன் கவுண்டியில், பொது நிச்சயதார்த்த ஒருங்கிணைப்பாளர் டீட்ரா தாமஸ் சிஎன்என் செய்திச் சேவையிடம், தீயில் சிக்கி ஒருவர் உயிரிழந்ததாக உறுதிபடுத்தினார்.

எனினும் அவர் பாதிக்கப்பட்டவரின் பெயரைக் குறிப்பிடவில்லை.

தீப்பரவலானது ஏற்கனவே அரை மில்லியன் ஏக்கர்களை அழித்துவிட்டது.

இந் நிலையில் மோசமான காற்றின் தரம் காரணமாக, அமரில்லோவிற்கு அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் தங்கள் செல்லப்பிராணிகளுடன் வீட்டிற்குள்ளேயே இருக்குமாறு தேசிய வானிலை சேவை எச்சரித்துள்ளது.

விவசாயம் மற்றும் கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு குறித்து டெக்சாஸ் விவசாயிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமரில்லோவில் உள்ள பான்டெக்ஸ் அணு ஆயுத தளத்திற்கு வடக்கே பரவிய தீ பற்றிய கவலைகளால், நிலையம் செவ்வாய்க்கிழமை (28) இரவு தற்காலிகமாக மூடப்பட்டதுடன், ஊழியர்கள் கட்டாயமாக வெளியேற வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இந்த ஆலை அமெரிக்க அணு ஆயுதங்களை பொருத்துவதற்கும், அகற்றுவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் ஒரு முக்கிய தளமாகும். (அ)

# அமெரிக்காவின் ரஷ்யா தொடர்பான கருத்தை நிராகரித்த பிரான்ஸ் அரசு!

பாரிஸ், மார்ச் 01

ரஷ்யாவின் சொத்துத் தொடர்பில் அமெரிக்கா நிதிச் செயலாளர் வெளியிட்ட கருத்தை, பிரான்ஸ் நிதியமைச்சர் ப்ருநோ லி மையர் சவாலுக்குள்ளாக்கியுள்ளார்.

ரஷ்யா, உக்ரையின் மீது மேற்கொண்ட அத்துமீறிய ஆயுதத் தாக்குதல் காரணமாக அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் ரஷ்யாவிற்கு எதிராக பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

அந்த வகையில் ரஷ்யாவிற்கு சொந்தமான பல பில்லியன் பெறுமதியான சொத்துக்கள்



வெளிநாடுகளில் முடக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு முடங்கிய சொத்துக்களை 300 பில்லியன் டொலராக சட்டரீதியாக மாற்ற முடியும் என அமெரிக்க நிதிச் செயலாளர் ஜெனெட் ஜிலேன் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் ஜி07 அமைப்பின் நிதியமைச்சர்களின் மாநாட்டின் பின்னர் கருத்து வெளியிட்ட பிரான்ஸ் நிதியமைச்சர், அவ்வாறு ரஷ்யாவின் சொத்துக்களை சட்டரீதியாக பணமாக மாற்றுவதற்கு ஏற்புடை சர்வதேச சட்டம் இல்லை எனவும் அதற்காக மேலும் வேலை செய்ய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இது உறுப்பு நாடுகளுக்கிடையே பிளவினை ஏற்படுத்தும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

# நவல்னியின் உடல் இன்று நல்லடக்கம்!

மொஸ்கோ, மார்ச் 01

சிறைச்சாலையில் மர்மமான முறையில் உயிரிழந்த, ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலக்ஸி நவல்னியின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை மெஸ்கோவில் அடக்கம் செய்யப்படும் என அவரது மனைவி யுலியா தெரிவித்துள்ளார்.

அத்துடன், இறுதி ஊர்வலம் அமைதியாக நடக்குமா? அல்லது ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்கள் கைது செய்யப் படுவார்களா? என்பது குறித்து தமக்கு உறுதியாக கூறமுடியாது எனவும் யுலியா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மெஸ்கோ மாவட்டம், மரிய்னோவில் உள்ள மரியாள் தேவாலயத்தில் இறுதி ஆராதனை வழிபாடுகள்



நடைபெற்று நல்லடக்கம் இடம் பெறுமென அலக்ஸியின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் அலக்ஸியின் இறுதி ஊர்வலத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படாத வண்ணம் பாதுகாப்பு பலப்படுத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசமைப்பின் உயர் சட்டத்தை மீறி பொய்யுரைத்த சபாநாயகர்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 01

**அரசமைப்பு பேரவையின் தலைவராக தற்போதைய சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அரசமைப்பின் உயர் சட்டத்தை மீறி நாட்டுக்கு பொய்யுரைத்துள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



நாட்டின் உச்சபட்ச சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது விட்டால்ஜனநாயகம்தொலைந்து சர்வாதிகாரம் உருவாகும் என்றும் அவர் கூறினார்.

பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் கீழ் கெக்கிராவை வித்தியார்த்த தேசிய பாடசாலைக்கு பேருந்து கையளித்த நிகழ்வில் நேற்று முன் தினம் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொலிஸ் மா அதிபர் நியமனத்துக்கு அரசமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கியதா இல்லையா என்பது இன்று பேசுபொருளாக மாறியுள்ளது. பொலிஸ் மா அதிபர் நியமன முன்மொழிவு அன்றைய நிகழ்ச்சி நிரலில்கூட இருக்கவில்லை. அன்று காலை 11.30 மணிக்கு அரசமைப்பு பேரவை கூட வேண்டியிருக்கும் நேரத்தில் 9.50 மணிக்கு பொலிஸ் மா அதிபரை நியமிக்கும் பரிந்துரை வந்தது. வாக்கெடுப்பு நடந்த போது பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மற்றும் சிவில் சமூக உறுப்பினர் அனுலா ஆகியோர் சார்பாக வாக்களித்தனர்.

நானும் வெளிநாடு சென்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிமும் தொழில்நுட்பத்தின் ஊடாக கலந்து கொண்டு ஆட்சேபம் தெரிவித்தோம். சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இருப்பினும் சபாநாயகருக்கு அறுதியிடும் வாக்கு மாத்திரமே உண்டு. 4 வாக்குகள் ஆதரவாகவும் எதிராகவும் இருந்தால் மட்டுமே இந்த அறுதியிடும் வாக்கை சபாநாயகரால் பாவிக்க முடியும்.

வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத இருவரினதும் வாக்கையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அறுதியிடும் வாக்கை சபாநாயகர் பயன்படுத்தியது தவறாகும். அவர் அரசமைப்பை அப்பட்டமாக மீறியுள்ளார். நாட்டின் உச்சபட்ச சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது விட்டால்ஜனநாயகம் தொலைந்து சர்வாதிகாரம் உருவாகலாம்.

இது ஓர் ஆபத்தான நிலையாகும். அரசமைப்பு பேரவையும் சட்டங்களை மீறினால் நாட்டு மக்களும் சட்டங்களை மீறத் தூண்டலாம். சபாநாயகர் நாட்டுக்கு நகைச்சுவைகளை வழங்கி மக்களை தவறாக வழி நடத்துகிறார் - என்றார். (ஐ)

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணைக்கு சு.க. ஆதரவு

கொழும்பு, மார்ச் 01

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்த குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையெழுத்திட்டனர்.

அதன்படி குறித்த தினத்திலேயே எம்.ஏ.சுமந்திரன், லக்ஷ்மன் கிரியெல்ல, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், திஸ்ஸ அத்தநாயக்க, சந்திம வீரக்கொடி மற்றும் ஷான் விஜயலால் டி சில்வா ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இதனை அடுத்து உத்தர லங்கா கட்சியும் தேசிய சுதந்திர முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதாக அறிவித்திருந்தன.

இணைய பாதுகாப்புச் சட்டத்தை சான்றுப்படுத்தும் போது நீதிமன்றம் வழங்கிய ஒன்பது பரிந்துரைகளை சபாநாயகர் புறக்கணித்துவிட்டார் என தெரிவித்தே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுகின்றது. (அ)

# எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை இவ்வாண்டு அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 01

“கடந்த 2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் எச்.ஐ.வி தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 14.3 சதவீதமாக அதிகரித்துள்ளதாக” தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு திட்டத்தின் பணிப்பாளர் சமூக மருத்துவ நிபுணர் ஜானகி விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஆண்டு, 694 புதிய எச்.ஐ.வி நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாவர்.

இதன்படி, 611 ஆண்கள் புதிதாக தொற்றுக்குள்ளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இது 88 வீதமாகும். மேலும், இந்த காலப்பகுதியில், 81 பெண்கள் புதிதாக எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, சமூகத்தில் எச். ஐ. வி தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை சுமார் 4,100 என மதிப்பிடப்பட்டுள்ளது-என்றார். (அ)

# அஸ்வெசும பெறுவோரின் எண்ணிக்கை ஜூன் முதல் 24 இலட்சமாக அதிகரிக்கும்!

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மார்ச் 01

அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்காக விண்ணப்பித்த பயனாளிகளின் தரவு சரிபார்ப்பு மற்றும் சான்றுப்படுத்தல் பணிகள் நிறைவடைந்துள்ளன. அஸ் வெசும பயனாளிகளின் குடும்ப அலகுகளின் எண்ணிக்கையை ஜூன் மாதம் முதல் 24 இலட்சமாக அதிகரிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.



அஸ்வெசும இரண்டாம் கட்ட விண்ணப்பம் கோரல் 2024 மார்ச் 15 ஆம் திகதியுடன் நிறைவடையும் என்றும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்காதவர்கள் எவரும் அஸ்வெசும பலனைப் பெறத் தகுதி பெறமாட்டார்கள்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

பொய்யான தகவல்களின் மூலம் அஸ்வெசும நன்மைகளைப் பெற்ற சுமார் 7 ஆயிரம் பேர் அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (அ)

# ரயிலில் மோதுண்டு இளைஞன் பலி!

கொழும்பு, மார்ச் 01

கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கி பயணித்த புகையிரதத்துடன் முந்தல் - புளிச்சாக்குளம் பாதுகாப்பற்ற ரயில் கடவையின் ஊடாக செல்ல முற்பட்ட இளைஞன் ஒருவர் நேற்று முன் தினம் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

புளிச்சாக்குளம், பத்துலு ஓயா பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் படுகாயமடைந்து முந்தல் மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் முந்தல் மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

திடீர் மரண விசாரணை அதிகாரியின் விசாரணைகளின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதேவேளை, புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலை புளிச்சாக்குளம் ரயில் நிலையத்திற்கு அருகில் நூற்றுக்கும் மேற்பட்டோர் நிறுத்தி, பாதுகாப்பற்ற கடவைக்கு தீர்வு பெற்று தருமாறு முந்தல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கோரிக்கை விடுத்ததையடுத்து இதற்கு தற்காலிக தீர்வாக இருவரை நியமித்துக் கொள்ளுமாறும் அதற்கான கொடுப்பனவை ரயில் திணைக்களத்திடமிருந்து பெற்று தருவதாகவும் தெரிவித்தையடுத்து மாலை 6.00 மணியளவில் ரயில் செல்லுவதற்கு மக்கள் அனுமதித்தனர். (அ)

# கனடாவுக்கு செல்ல அனுரகுமார திட்டம்!

கொழும்பு, மார்ச் 01

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க அடுத்த மாதம் கனடாவுக்குச் செல்ல திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர் மார்ச் 23 ஆம் திகதி ரொறன்ரோவில் ஒரு கூட்டத்தில் உரையாற்றவுள்ளதுடன் அங்கு வாழும் இலங்கையர்களுடன் உரையாடுவார் என்றும், சில கனேடிய அரசியல்வாதிகளைச் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அனுரகுமார திஸாநாயக்க அண்மையில் அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்குச் சென்றிந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறிலங்கன் எயார்லைன்ஸ் மார்ச் 5 ஏலத்தில் விற்பனை

கொழும்பு, மார்ச் 01

எதிர்வரும் மார்ச் மாதம் 05 ஆம் திகதி சிறிலங்கன் எயார் லைன்ஸை விற்பனை செய்வதற்கான ஏலங்கள் நேரடியாக நடத்தப்பட்டு முதலீட்டாளர் தெரிவு செய்யப்படவுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நிகழ்ச்சியில் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் ஏலங்களை அழைத்துள்ளோம், மார்ச் 5 ஆம்திகதி காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை இதற்காக வரலாம். இது நேரலையில் செய்யப்படும். மதியம் 2.00 மணிக்குள் ஏலங்களைத் திறந்து மதிப்பீடு செய்யலாம். அதை ஆதரிக்க ஒரு தொழில்நுட்பக் குழுவும் உள்ளது. அவர்கள் ஏலங்களை மதிப்பீடு செய்வார்கள். இறுதியாக, அது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். குறைந்தபட்சம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதற்கான வலுவான முதலீட்டாளர் வர வேண்டும். அத்துடன் விமான நிறுவனத்தின் 6,000 பணியாளர்களின் வேலைகளை பாதுகாப்பதும் அவசியம்-என்றார். (அ)

# பஸ் விபத்தில் சிக்கி 36 மாணவர் காயம்!

கொழும்பு, மார்ச் 01

மொனராகலையில் நேற்று காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் 36 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றே புத்தம பகுதியில் இருந்து மொனராகலை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கையில் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட 36 பேர் காயமடைந்துள்ள நிலையில், அவர்கள் சியம்பலாண்டுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## சிவாஜிக்கு...

அரசமைப்புக்கும் பயங்கரவாத தடைச் சட்ட விதிகளுக்கும் முரணானது என்று அவரின் சார்பில் மன்றில் வாதிட்ட மூத்த சட்டத்தரணி கே. எஸ். ரட்ண வேல் தெரிவித்தார்.

இதை ஏற்ற மேல் நீதிமன்றம் சிவாஜிலிங்கத்தை வழக்கை தள்ளுபடி செய்தது.

முன்னதாக, கோப்பாய் பொலிஸ் பிரிவின் கீழுள்ள உரும்பிராயில் கடந்த 2020 செப்ரெம்பர் 15ஆம் திகதி திலீபனை நினைவுகூர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் சிவாஜிலிங்கம் கைதாகி யாழ். நீதிவான் நீதிமன்றால் பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், கடந்த 2022ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் சிவாஜிலிங்கத்துக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டது. இது தொடர்பான 7 வழக்குகளில் சிவாஜிலிங்கம் நீதிமன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. மருத்துவ காரணங்களாலேயே அவர் மன்றில் சமுகளிகவில்லை. இதையடுத்து அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. எனினும், கடந்த வருடம் செப்ரெம்பர் 22ஆம் திகதி அவர் நீதிமன்றில் முன்னிலையானார். அவரின் உடல் நலனை கருத்தில் கொண்டு அவருக்கு பிணை வழங்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசமைப்பு...

அங்கீகரிப்பதற்காக வாக்களித்ததன் மூலம் அரசமைப்பை மீறியுள்ளார். சபாநாயகர் அரசியல் சாசனத்தை புறந் தள்ளிவிட்டு தனது சொந்த வழியில் காரியங்களை செய்து வருகிறார். எனவே, அரசமைப்பு பேரவையில் நீடிக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டிய தருணம் வந்துவிட்டது. உயர் அதிகாரிகள் பின்பற்றாதபோது தற்போதைய அரசமைப்பு ஏதேனும் பயன் உள்ளதா என்பதையும் ஒருவர் தீர்மானிக்க வேண்டும்," - என்றும் அவர் கூறினார்.

## தனியார்...

தீர்மானங்கள் எட்டப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் தூர இடங்களுக்கான சேவை வழங்கும் தனியார் பேருந்துகள் யாழ். போதனா மருத்துவமனையின் பின்புற (மின்சார நிலைய வீதி) நுழைவாயிலுக்கு அண்மையாக தரித்து நின்று சேவையில் ஈடுபடுகின்றன. இந்நிலையில், செவ்வாய்க்கிழமை முதல் அந்த இடத்தில் பேருந்துகளை நிறுத்தத் தடை விதிக்கப்பட்டது.

இதையடுத்து, தரிப்பிடம் இன்மையால் சேவையை புறக்கணிப்பதாக தனியார் பேருந்துகள் அறிவித்திருந்தன. இதைத் தொடர்ந்து நேற்று இ. போ. ச. பேருந்துகளை மறித்து பேருந்து சேவையினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த விடயத்தில் வடக்கு ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் எம். பி. ஆகியோர் தலையிட்டனர்.

இந்தநிலையில், நேற்று மாலை ஆளுநர் செயலகத்தில் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த தனியார் பேருந்து சங்கங்களின் தலைவர்களும் பங்கேற்று பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சில் வடக்கு ஆளுநர், அமைச்சர் டக்ளஸ், அங்கஜன் எம். பி. ஆகியோரும் பங்கேற்றிந்தனர்.

இதன்போது, தூர இடங்களுக்கான சேவை வழங்குவதற்கென அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்திலிருந்தே இ. போ. ச. பேருந்துகளும் சேவையில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அவர்களின் கோரிக்கைக்கு ஒரு வாரத்தில் தீர்வு பெற்றுத் தருவதாகவும். இந்தப் பிரச்னையை ஆராய்ந்து தீர்வு வழங்க குழு ஒன்று நாளை (இன்று) அமைக்கப்படும் என்றும் ஆளுநர் உறுதியளித்தார்.

இதைத் தொடர்ந்து இன்று முதல் தனியார் பேருந்து சேவைகள் வழக்கம் போன்று சேவையில் ஈடுபடும் என்று தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்கள் அறிவித்தன. (ஐ-02)

# "பெருந்தோட்ட மக்களின் நலன்கருதி த. மு. கூட்டணி சிறந்த முடிவு எடுப்பர்!"

கொழும்பு, மார்ச் 01

பெருந்தோட்ட மக்களின் நலன் கருதி தமிழ் முற்போக்கு கூட்டணியினர் சிறந்த அரசியல் தீர்மானம் எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். கடந்த ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் நாங்கள் ஒன்றிணைந்து செயல்பட் டோம். தொடர்ந்து ஒன்றிணைந்து செயல்படுவதில் சிக்கலில்லை என ஐக் கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் ஐக்கிய குடியரசு முன்னணிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனின் இல்லத்தில் நடைபெற்றது. இதன் பின்னர் அவர் செய்தியளாரகளுக்கு கருத்து வெளியிடுகையில்,

நாட்டுக்காக ஒன்றிணையும் முயற்சி என்ற செயல்திட்ட யோசனையை கடந்த 14 ஆம் திகதி வெளியிட்டோம். மனித நேயமிக்க கூட்டணியை அமைப்பதற்கு எமது பிரதான இலக்காகும். சிறீலங்கா பொதுஜன பெரமுனவை தவிர்த்து ஏனைய அரசியல் கட்சிகளுடன் எதிர்வரும் நாட்களில் பேச்சில் ஈடுபடவுள்ளோம்.

இந்த கலந்துரையாடலின் போது பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படை பிரச்னைகள் குறித்து மனோ கணேசன் உட்பட சக பாராளுமன்ற உறுப்பினர்கள் யோசனைகளை முன்வைத்தார்கள். அந்த யோசனைகள் தொடர்பில் எமது சாதகமான நிலைப்பாட்டை அறிவிப்போம்.. (ஐ)

## தலைமை...

ஜனாதிபதி சட்டத்தரணிகள் கே. வி. தவராசா, புவிதரன் ஆகியோர் முன்னிலையாகியிரு ந்தனர்.

இந்த வழக்கில் வழங்கப்பட்ட கட்டாணையை நீடிக்க வேண்டுமென வழக்காளி சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் கோரினார்.

இதற்கு பதிலளித்த பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணி கே. வி. தவராசா இது சாதாரண எல்லை, காணி பங்கீட்டு வழக்கல்ல. ஓர் இனத்துடன் தொடர்புடைய - பாரம்பரிய கட்சியுடன் தொர்புடைய வழக்கு. இந்த வழக்கை தொடர்ந்து நீடிக்க- தொடர்ந்து நடத்த நாம் தயாரில்லை. இதனால் இன நலனின் அடிப்படையில் வழக்கை முடித்து, கட்சியை இயங்க செய்வதற்காக சில விட்டுக் கொடுப்புகளை செய்யவும் தயாராக இருக்கிறோம். வழக்காளிகள் கோரும் நிவாரணங்களை நாம் வழங்க தயாராக இருக்கிறோம்.

தமிழ் அரசு கட்சியின் தலைவர் பதவிக்கான போட்டி நடந்ததாலேயே இந்த நிலைமை வந்தது. சிறீதரன் வெற்றி பெற்றிருக்காவிட்டால் இந்த வழக்கே வந்திருக்காது. ஆனால், சிறீதரன் பெரும்பான்மையான வாக்குகளால் வென்றார். அவர் அந்த வெற்றியையும் துறந்து கட்சியை மீள இயங்க செய்ய விரும்புகிறார். அதனால் தலைவர் தெரிவையும் மீள நடத்தத் தயாராக இருக்கிறோம் - என்றார்.

இதனிடையே, ப. சத்தியலிங்கம், சே. குலநாயகம் ஆகியோர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஆட்சேபனைக்கு திகதி குறிப்பிடும்படி கேட்டார்.

இதை சட்டத்தரணி கே.வி.தவராசா ஆட்சேபித்தார். அவர்கள் இருவரும் இந்த மன்றிலேயே இருப்பதால் அவர்களின் நிலைப்பாட்டை நேரில் கேட்க வேண்டுமென்றார். இதற்கு அவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஆட்சேபனை தெரிவித்தார்.

எனினும், இது கட்சி சார்ந்த வழக்கு, அனைவரும் கட்சி பிரமுகர்கள், கட்சி தீர்மானமும் இதில் தொடர்புபட்டுள்ளது என கே. வி. தவராசா சுட்டிக் காட்டினார். இதையடுத்து, அவர்களின் நிலைப்பாட்டை கேட்க நீதிமன்றம் சம்மதித்தது.

இருவரையும் அழைத்த நீதிமன்றம், அவர்களின் நிலைப்பாட்டை கேட்டது. அவர்கள் தமக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறினர்.

இந்த வழக்கின் 7 பிரதிவாதிகளில் ஒருவரான எம். ஏ. சுமந்திரன் நேற்று மன்றில் முன்னிலையாகவில்லை. (அவரின் தாயாரின் இறுதிக் கிரிணை நடைபெற்றதால்). எனவே, அவரின் நிலைப்பாட்டை அறிய ஏப்ரல் 5ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேசமயம், சுமந்திரனும் ஆட்சேபிக்காதபட்சத்தில் இந்த வழக்கு விரைவில் தீர்க்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மீனவர் பிரச்னை விவகாரத்தில் அமைச்சர் டக்ளஸ் தோல்வி!

### மீனவ மக்கள் தொழிற்சங்க இணைப்பாளர் அன்னராசா

யாழ்ப்பாணம், மார்ச் 01

மீனவர்களின் பிரச்னையில் இலங்கையினதும் கடற்றொழில் அமைச்சரினதும் இராஜதந்திரம் தோற்றுப் போயுள்ளது என அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் அ. அன்னராசா சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

2016. 11. 5ஆம் திகதி இலங்கை இந்திய வெளிவிகார அமைச்சு மட்டத்தில் கடற்தொழில் அமைச்சு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானத்தை 2016 இல் இருந்து 2024 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மீனவர்கள் பிரச்னையில் அமைச்சருடையதும் இலங்கையினதும் இராஜதந்திரம் தோற்றுபோயுள்ளது என்பது தான் எங்களுடைய கருத்து.

கடற்றொழில் அமைச்சர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார் மீனவர் பிரச்சினையில் முடிவு எடுக்கும் அதிகாரம் தனக்கே உண்டு என்றும், நான் தான் கடற்றொழில் அமைச்சர் என்றும் கூறி வருகின்றார். ஆனால், கடந்த காலங்களில் பிரதமர் ஒரு கருத்தையும் வெளிவிவகார அமைச்சர் ஒரு கருத்தையும் கூறிவந்துள்ளனர்.

ஆனால் மீனவர் பிரச்னையில் முடிவெடுக்க வேண்டிய கடற்றொழில் அமைச்சரே தற்பொழுது தோற்றுப் போன இராஜதந்திரம் என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

மீனவர் பிரச்னையில் இராஜதந்திர ரீதியில் இலங்கைக்கு அழுத்தம் வழங்கினால் தான் தனது பதவியை இராஜினாமா செய்வேன் என தெரிவித்துள்ளார். இது எங்களுக்கு கவலை




அளிக்கின்ற விடயம்.

வடக்கு கடற்தொழிலாளர்களின் பிரச்னையில் வெளிநாட்டு படகுகளை கையாள்வது தொடர்பிலான 2018 ஆம் ஆண்டு சட்டத்தை அமுல் படுத்துவதிலும் இராஜதந்திரம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டம் இலங்கையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமையால் வடக்கு மாகாணத்தை சேர்ந்த கடற்றொழில் சமூகம் தொடர்ந்து பாதிக்கப்படுகிறது.

இது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயம் அல்ல. பொறுப்பு வாய்ந்தவர்கள் அதிகாரத்திலிருந்து கொண்டு இராஜதந்திரம் தோற்றுப் போய் உள்ளது என்று கூறுவது எங்களுக்கு கவலை அளிப்பதும் வேடிக்கையாகவும் இருக்கின்றது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## அமைச்சரவை...

உரிமை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரியந்த ஜயவர்தன, காமினி அமரசேகர, குமுதுனி விக்ரமசிங்க ஆகியோர் அடங்கிய நீதியரசர்களால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2019 ஒக்ரோபர் 15 ஆம் திகதி, குறித்த அமைச்சரவை தீர்மானமானது பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையில் பங்கேற்றிருந்த போதே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அது நியதிகளுக்கு எதிரான செயல்பாடு எனவும் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சிகளுக்கமைய தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக நீதியரசர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்கு முன்னர் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை அமைச்சரவை மேற்கொண்டுள்ள தீர்மானத்தை இடைநிறுத்தி நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்திருந்தது.

## இ.போ.ச...

விதிக்கப்பட்ட தடையை தொடர்ந்து இரு தினங்கள் சேவைப் புறக்கணிப்பை மேற்கொண்டன. இந்த நிலையில், நேற்று இ. போ. ச. பேருந்து நிலையம் முன்பாக பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த முடியாதவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், இந்த விடயத்தில் வடக்கு ஆளுநர் தலைமையிலானவர்கள் தலையிட்டமையை தொடர்ந்து இ. போ. ச. பேருந்துகள் தொடர்ந்து சேவையில் ஈடுபட்டன. (ஐ)

## சாந்தனின்...

நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதையடுத்து சாந்தனின் இறப்பு குறித்து சிறப்பு முகாமில் உள்ள ராபர்ட் பயஸ் உலகத் தமிழர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில், திருச்சி சிறப்பு முகாம் சிறையை விட கொடுமையானது என்று கூறியுள்ள அவர், தன் மகனை ஒருமுறையாவது பார்த்துவிட வேண்டும் என்று ஏங்கிய சாந்தனின் தாயிடம் உயிரற்ற உடலை தான் கொண்டு சேர்க்கப்போகிறோம்.

மேலும், நீண்டகால சிறைவாசமும், குடும்பங்களை பிரிந்த துயரமும் எங்களை நோயாளிகளாக்கின. சாந்தனுக்கு ஏற்பட்ட நிலை, சிறப்பு முகாமில் உள்ள மற்ற மூவருக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று கூறியுள்ளார்.

மேலும், தங்களின் கடைசி காலத்தை குடும்பத்தினருடன் செலவழிக்க அரசு இனியாவது நடவடிக்கை எடுக்குமா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු

# நாட்டின் பொருளாதாரம் வரி விதிப்பால் சிறைக்குள்!

## அனுரகுமார குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 01

**“எமது நாட்டின் வரி விதிப்பின் மூலம் எமது பொருளாதாரம் சிறைப்படுத்தப்பட்டுள்ளதால், எமது பொருளாதாரம் விரிவடையவில்லை” என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.**

தேசிய மக்கள் சக்தியின் வங்கி மற்றும் நிதிசார் ஒன்றியத்தின் கொழும்பு மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தளர்வான ஒரு வரிக்கொள்கையே எமக்குத் தேவை. எமது மத்திய வங்கி ஆளுனர் பொருளாதாரத்தை சுருக்கி வைத்துள்ளதுடன், வட்டி வீதத்தை அதிகரித்தல், பாரியளவில் வரி விதித்தல், இறக்குமதியைக் கட்டுப்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளால் பொருளாதாரத்தைச் சுருக்கியுள்ளார் .

எமது திட்டம் பொருளாதாரத்தை விரிவாக்குவதாகும். பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டும். அத்துடன், தம்மிடம் இருக் கின்ற கொழும்பை மையப்படுத்திய பொருளாதாரத்தினை கிராமிய மக்களுக்கு விரிவுபடுத்த வேண்டும். அத்துடன் புதிய பொருளாதார தோற்றுவாய்களை கிராமத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டும் - என்றார். (அ)

# ரணிலை சந்தித்த பொலிஸ்மா அதிபர்



கொழும்பு, மார்ச் 01

பொலிஸ் மா அதிபராக நேற்று பதவியேற்றுக் கொண்ட தேசபந்து தென்னக்கோன் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார்.

இலங்கையின் 36ஆவது பொலிஸ் மா அதிபராக பதவியேற்ற புதிய பொலிஸ் மா அதிபருக்கு வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவருடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

புதிய பொலிஸ் மா அதிபர் ஜனாதிபதிக்கு பரிசில் ஒன்றை வழங்கினார். (அ)

# அனுரகுமார திஸாநாயக்கவுக்கு கறைபடிந்த கடந்த காலம் உண்டு

## ஹிருணிகா பிரேமச்சந்திர விமர்சனம்

கொழும்பு, மார்ச் 01

அனுர குமார திஸாநாயக்கவுக்கு பயங்கரமான, கறைபடிந்த ஒரு கடந்த காலம் உள்ளதாக முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச் சந்திர தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி எனப்படும் தேசிய மக்கள் சக்தியின் ஹரிணி அமரசூரியவுக்கு சிறந்ததொரு அரசியல் பயணம் உள்ள தால் அவர் ஜனாதிபதி வேட்பாளருக்கு பொருத்தமானவர் எனவும் ஹிருணிகா கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக வேண்டியவர் ஹரிணி அமரசூரியவே.

அனுரகுமார திஸாநாயக்கவுக்கு பயங்கரமான, அழுக்குப் படிந்த ஒரு கடந்த காலம் உண்டு. ஹரிணி அமர சூரியவுக்கு அவ்வாறான கடந்த காலம் இல்லை.

ஹரிணி அமரசூரிய படித்த, புத்தி சாலியான , சர்வதேச ரீதியிலான தொடர்புகளுடைய பெண்.

பாலியல் தொழில் சட்டபூர்வமாக்கப்படும் என்ற முன்மொழிவு தேசிய மக் கள் சக்தியின் கொள்கைகளுக்குள் உள் வாங்கப்படும் என ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் கூறியிருந்தால் மக்கள் எம்மை ஏசியிருப்பார்கள்.

எனினும், திசைகாட்டியின் கூட்டங்களில் அமர்ந்திருக்கக்கூடிய பெண் கள் அவ்வாறான கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர். மகளைப் பெற்ற தாயொருவரால் அவ்வாறான கதை களைக் கேட்டு கைதட்ட முடியுமா?

சரியானதொரு வேலைத்திட்டத்தைக் கொண்ட தூர நோக்குடைய இடத்தை பெண்கள் தெரிந்தெடுக்க வேண்டும் - என்றார். (அ)

# முஷாரப்பை கட்சியிலிருந்து நீக்கியது சட்டத்துக்கு முரண்!

கொழும்பு, மார்ச் 01

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப்பை கட்சியில் இருந்து நீக்கியது சட்டத்துக்கு முரணானது என உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

கட்சியில் இருந்து நீக்கப்பட்டதற்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பை வழங்கிய பிரியந்த ஜயவர்தன தலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த முடிவை அறிவித்துள்ளது. (அ)

People's Petition
Northern and Eastern Provinces Civil Society Group
வடக்கு, கிழக்கு மாகாண சிவில் சமூக குழு

கருத்தாய்வு

ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வது எப்படி?

காலம்: 03.03.2024 ஞாயிறு மாலை 4.00 மணி
இடம் : தந்தை செல்வா கலையரங்கம், யாழ்ப்பாணம்

கருத்துரை:
பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம்
யதீந்திரா
மரியாம்பிள்ளை செல்வின் இரேனியஸ்

“தேர்தலை எதிர்கொள்வது எப்படி? ஏன்?”
என்ற தலைப்பில்
அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கருத்துரைப்பார்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- வடக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக குழு.

# சுமந்திரனின் மனுவை விசாரிக்காமலேயே நேற்று தள்ளுபடி செய்தது உயர்நீதிமன்றம்!

கொழும்பு, மார்ச் 01

இணையவழி பாதுகாப்பு சட்டத்திற்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

குறித்த மனு உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, ஷிரான் குணரட்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய ஆயம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

இந்த நிலையில், குறித்த மனுவை, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது நிராகரிப்பதற்கு நீதியரசர்கள் ஆயம் தீர்மானித்துள்ளது.

குறித்த சட்டம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களை அதில் உள்வாங்காது அதனை நிறைவேற்றியமையினால் அது அரசியலமைப்புக்கு முரணானது என உத்தரவிடக் கோரி, எம்.ஏ சுமந்திரனால் இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பணவீக்கம் குறைவடைவு

கொழும்பு, மார்ச் 01

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி கடந்த பெப்ரவரி மாதம் நாட்டின் பணவீக்கம் 5.9 சதவீதமாக குறைந்துள்ளது.

2024 ஜனவரியில் நாட்டில் பணவீக்கம் 6.4 சதவீதமாக பதிவானமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, உணவுப் பணவீக்கம் 2024 ஜனவரியில் 3.3வீதமாக இருந்ததுடன், இது பெப்ரவரியில் 3.5வீதமாக உயர்வடைந்துள்ளது. (ஐ)

# பலசரக்கு ஏற்றுமதியில் 15 கோடி ரூபா இலாபம்

கொழும்பு, மார்ச் 01

தேசிய பலசரக்கு ஏற்றுமதி ஊடாக கடந்த வருடத்தில் 15 கோடி ரூபாவுக்கும் அதிக இலாபம் ஈட்டப்பட்டுள்ளதாக ஏற்றுமதி விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கராம்பு, மிளகு, சாதிக்காய், கறுவா, ஏலம் உள்ளிட்ட 63,232 மெற்றிக் தொன் அளவிலான பலசரக்கு பொருட்கள் கடந்த வருடம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் வருடம் பலசரக்கு பொருள் ஏற்றுமதியின் ஊடாக 14 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஏற்றுமதி விவசாய திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு





# பங்களாதேஷ் ரி -20 தொடர் இலங்கை அணி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 01

இலங்கை கிரிக்கெட் அணி பங்களாதேஷ் சென்று 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாட வுள்ளது. முதல் போட்டி எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்ப மாகின்றது.

இந்நிலையில், இந்தத் தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் 2 போட்டிக ளுக்கு சரித் அசலங்க தலைவராக நியமிக்கப்பட்டுள் ளார். வனிந்து ஹசரங்கவுக்கு இரு போட்டிகளில் விளையாட ஐ. சி. சி. தடை விதித்ததாலேயே அசலங்க தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அணி விவரம் - சரித் அசலங்க (2 போட்டிகளுக்கு தலைவர்), வனிந்து ஹசரங்க ( 3ஆவது போட்டிக்கு தலைவர்), குசல் மெண்டிஸ், சதீர சமரவிக்ரம, அஞ் சலோ மத்தியூஸ், தீக்ஷனா, தனஞ்சய டி சில்வா, குசல் ஜனித் பெரேரா, மதுஷங்க, நுவான் துஷார, பத்திரண, அகில தனஞ்சய, பினுரா பெர்னண்டோ, கமிந்து மெண்டிஸ், அவிஷ்க பெர்னண்டோ மற்றும் ஜெப்ரி வொண்டர்சே.

# நியூசிலாந்துடனான டெஸ்ட் ஆஸி. முதல் நாளில் 279/9

வெலிங்டன், மார்ச் 01

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முதல்நாள் ஆட்டம் முடிவில் அவுஸ்திரேலிய அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 279 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நியூசிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி 3 இருபது - 20, 2 டெஸ்ட் தொடர்களில் விளை யாடுகிறது. இதில், இருபது -20 தொடரை ஆஸி. 3 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடை யிலான டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப் பைத் தெரிவு செய்தது.

இதன்படி தனது முதல் இன்னிங்ஸ தொடங் கிய அவுஸ்திரேலிய அணிக்கு ஸ்மித் மற்றும் உஸ்மான் கவாஜா ஓரளவு நல்ல தொடக்கம் கொடுத்தனர். ஸ்மித் 31 ஓட்டங்களிலும் கவாஜா 33 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். பின்னர் களமிறங்கிய வீரர்களில் கமரூன் கிறீன் தவிர மற்ற வீரர்கள் அவுஸ்திரேலிய அணிக்கு ஏமாற்றம் அளித்தனர்.

மார்னஸ் லபுஷாக்னே, டிராவிஸ் ஹெட் தலா ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர். சிறிது நேரம் நிலைத்து விளையாடிய மிற்செல் மார்ஷ் 40 ஓட்டங்களிலும் அலேக்ஸ் கேரி 10 ஓட்டங்களிலும், ஸ்டார்க் 9 ஓட்டங் களிலும், கம்மின்ஸ் 16 ஓட்டங்களிலும், லயன் 5 ஓட் டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

ஒருபுறம் விக்கெட்கள் சரிந்தாலும் மறுமுனையில்



தனி ஆளாக போராடிய கிறீன் சதம் அடித்து அசத்தி னார். இதன் மூலம் அவுஸ்திரேலியா முதல் நாளில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 279 ஓட்டங்கள் சேர்த்துள்ளது. அபாரமாக விளையாடி சதமடித்த கிறீன் 103 ஓட்டங் களிலும், ஹசில்வுட் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் ஆட்டமிழக்காது உள்ளனர். நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி 4 விக்கெட்க ளும், வில்லியம் ஒ ரூர்க் மற்றும் ஸ்காட் குகெலீஜ்ன் தலா 2 விக்கெட்களும், ரச்சின் ரவீந்திரா ஒரு விக்கெட் டும் வீழ்த்தினர்.

இன்று போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டமா கும். (ஐ)

# புகழ்பெற்ற நடுவரான மரைஸ் எராஸ்மஸ் ஓய்வு

வெலிங்டன், மார்ச் 01

புகழ்பெற்ற நடுவரான மரைஸ் எராஸ்மஸ் நியூசிலாந்து - அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறுவ தாக அறிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவை சேர்ந்த நடுவரான மரைஸ் எராஸ்மஸ் சர்வதேச கிரிக்கெட்டில் பல போட்டிகளுக்கு நடுவராக பணியாற்றியுள்ளார்.

2006ஆம் ஆண்டு இவர் தனது முதல் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் நடுவராகப்



பணியாற்றினார். தற்போது வரை நூற்றுக்கும் மேற்பட்ட சர்வதேச கிரிக்கெட்டில் நடுவராக பணி யாற்றியுள்ளார்.

3 முறை ஐ. சி. சியின் சிறந்த நடுவர் விருதை இவர் வென்றுள் ளார். 61 வயதாகும் இவர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித் துள்ளார்.

நியூசிலாந்து - அவுஸ்திரே லியா அணிகள் மோதும் டெஸ்ட் தொடருடன் ஓய்வு பெறுவதாக தெரிவித்துள்ளார். மேலும் ஓய்வு பெற்றாலும் கிரிக்கெட்டில் தன்னுடைய பங்களிப்பு இருக்கும் எனக் கூறியுள்ளார். (ஐ)

# இந்திய அணியின் வீரர்கள் ஒப்பந்த விவரம் வெளியானது!

மும்பை, மார்ச் 01

இந்திய ஆடவர் கிரிக்கெட் அணிக்காக விளையா டும் வீரர்களின் ஆண்டு ஒப்பந்த விவரத்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி. சி. சி. ஐ.) வெளி யிட்டுள்ளது.

இதில் இளம் வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் இடம் பெற்றுள்ளார். அதேநேரத்தில் இந்திய அணிக்காக விளையாடி வந்த ஸ்ரேயாஸ் ஐயர், இஷான் கிஷன் ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆண்டுதோறும் இந்திய அணிக்காக விளையாடும் வீரர்களின் ஒப்பந்தம் சார்ந்த விவரங்களை பி. சி. சி. ஐ. புதுப்பிக்கும். அந்த வகையில் 2023 - 2024 பருவ காலத்துக்கானவீரர்களின் ஒப்பந்த விவரம் தற்போது வெளியாகியுள்ளது. இதில், உள்ளூர் அளவிலான கிரிக்கெட் போட்டிகளில் விளையாட மறுத்த விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான இஷான் கிஷன் மற்றும் ஸ்ரேயஸ் ஐயர் இடம்பெறவில்லை. கடந்த பருவத்துக்கான ஒப்பந்தத்தில் இவர்கள் இருவரும் இடம் பெற்று இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஏ பிளஸ் பிரிவு - ரோஹித் சர்மா, விராட் கோலி, ஜஸ்ப்ரீத் பும்ரா, ரவீந்திர ஜடேஜா

ஏ பிரிவு - அஸ்வின், முகமது ஷமி, முகமது சிராஜ், கே. எல். ராகுல், /ப்மன் கில், ஹார்திக் பாண்ட்யா

பி பிரிவு - சூர்யகுமார் யாதவ், ரிஷப் பந்த், குல்தீப் யாதவ், அக்சர் படேல், யஷஸ்வி ஜெய்ஸ்வால்.

சி பிரிவு - ரிங்கு சிங், திலக் வர்மா, ருதுராஜ் கெய்க்வாட், ஷர்துல் தாக்குர், ஷிவம் துபே, ரவி பிஷ்னோய், ஜிதேஷ் சர்மா, வாஷிங்டன் சுந்தர், முகேஷ்



குமார், சஞ்சு சாம்சன், அர்ஷ்தீப் சிங், கே. எஸ். பரத், பிரசித் கிருஷ்ணா, ஆவேஷ் கான், ரஜத் பட்டிதார்.

இது தவிர இந்த காலகட்டத்தில் குறைந்தது 3 டெஸ்ட் போட்டிகள் அல்லது 8 ஒருநாள் போட்டிகள் அல்லது 10 டி20 போட்டிகளில் விளையாடும் வீரர்கள் 'கிரேடு சி' ஒப்பந்தத்தில் சேர்க்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக துருவ் ஜுரல் மற்றும் சர்பராஸ் கான் ஆகியோர் தற்போது 2 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடி உள்ளார்கள். அவர்கள் இருவரும் தரம்சாலாவில் நடைபெறும் டெஸ்ட் போட்டியில் விளையாடினால் 'கிரேட் சி' பிரிவில் இணைவார்கள்.

இதேநேரம், புஜாரா, ஷிகர் தவான், உமேஷ் யாதவ், தீபக் ஹூடா, அர்ஷ்தீப் சிங் ஆகியோர் கடந்த பருவத் க்கான ஒப்பந்தத்தில் இடம்பெற்றிருந்தனர். தற்போது வெளியானஒப்பந்த பட்டியலில் அவர்களும் இல்லை. (ஐ)



# ஐ. சி. சி. தரவரிசை பட்டியல் ஜெய்ஸ்வால் 12ஆவது இடத்தில்!

புதுடில்லி, மார்ச் 01

டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களுக்கானதரவரிசை பட்டி யலில் இந்திய அணியின் தொடக்க வீரரான யஷஸ்வி ஜெய்ஸ்வால் 3 இடங்கள் முன்னேறி 12ஆவது இடத்தை அடைந்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது. இதில், இந்திய அணியின் தொடக்க வீரரான யஷஸ்வி ஜெய்ஸ் வால் 3 இடங்கள் முன்னேற்றி 12ஆவது இடத்தை அடைந்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் தொடங்குவதற்கு முன்ன தாக ஜெய்ஸ்வால் தரவரிசையில் 69ஆவது இடத்தில் இருந்தார். இங்கிலாந்து தொடரில் 2ஆவது மற்றும் 3ஆவது டெஸ்ட் போட்டியில் ஜெய்ஸ்வால் இரட்டை சதங்கள் விளாசியதன் மூலம் தரவரிசையில் படுவேக மாக முன்னேற்றம் கண்டு 15ஆவது இடத்தை எட்டிப்பிடித்திருந்தார்.

ராஞ்சியில் நடைபெற்ற 4ஆவது டெஸ்ட் போட்டி யில் இரு இன்னிங்ஸிலும் கூட்டாக 110 ஓட்டங்கள் சேர்த்ததன் மூலம் தற்போது தரவரிசையில் 3 இடங்கள் முன்னேற்றம் அடைந்துள்ளார் ஜெய்ஸ்வால்.

தரம்சாலாவில் வரும் 7-ம் தேதி தொடங்கும் கடைசி டெஸ்ட் போட்டியிலும் ஜெய்ஸ்வால் உயர்மட்ட செயல் திறனை வெளிப்படுத்தினால் தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் வருவதற்கான வாய்ப்புகள் உருவாகக்கூடும். (ஐ)

# தென்னாசிய அரசியலில் கிரிக்கெட் ஆளுமைகள்: வெற்றியில் பங்களாதேஷ்-பாகிஸ்தான் கப்டன்கள் !!

**பாகிஸ்தான், இந்தியா தற்போது பங்களாதேஷில் உருவாகியுள்ள கிரிக்கெட் வீரர்களின் அரசியல் பிரவேசம் பலத்த சலசலப்பை உருவாக்கியுள்ளதுடன் ஆட்சி மாற்றங்களுக்கும் வழிகோலியுள்ளது.**

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கிரிக்கெட் விளையாட்டை அரசியலுக்கு அப்பாற்பட்டு பேணுவதே தமது நோக்கம் என தென்னாசியாவில் உள்ள கிரிக்கெட் விளையாடும் நாடுகள் காலங்காலமாக தெரிவித்து வந்துள்ளன.

ஆயினும் கிரிக்கெட்டில் பிரகாசித்த வீரர்களின் அரசியல் பிரவேசம் தென்னாசியாவில் நீண்டகாலமாக நிகழ்ந்து வருகிறது. கிரிக்கெட் வீரர்கள் அரசியலில் பாரிய வெற்றிகளை, மாற்றங்களை உருவாக்கியுள்ளார்கள்.



முன்பு பாகிஸ்தான், இந்தியா தற்போது பங்களாதேஷில் உருவாகியுள்ள கிரிக்கெட் வீரர்களின் அரசியல் பிரவேசம் பலத்த சர்ச்சைகளை உருவாக்கியுள்ளதுடன் ஆட்சி மாற்றங்களுக்கும் வழிகோலியுள்ளது.

இவ்வருட ஆரம்பத்தில் ஜனவரியில், பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைவர் ஷகிப் அல் ஹசன் பங்களாதேஷ் பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத் தொகுதியில் பெரும் வெற்றி பெற்றார்.

**பங்களாதேஷ் கப்டனின் வெற்றி:**

வங்கநாட்டு தேசிய கிரிக்கட் அணியை வழிநடத்தும் பல்துறை வீரர் ஷகிப் அல் ஹசன் பங்களாதேஷ் மேற்கு நகரத்தில் உள்ள மகுரா தொகுதியில் தனது போட்டியாளரை 150,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

கிரிக்கெட் கப்டனாக தனது வேலையை வெற்றிகரமாக செய்ய முடிந்த அதே நேரம், அவர் தனது தேர்தல் பிரச்சாரத்தில் கவனம் செலுத்த விளையாட்டிலிருந்து சிறிது இடைவெளி எடுத்தாலும், அவர் ஓய்வு இன்னமும் பெறவில்லை.




பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான ஆளும் அவாமி லீக் கட்சியின் வேட்பாளராக இவர் போட்டியிட்டார். கப்டன் ஷகிப்பின் சாதனைகளில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் கூற்றுப்படி, ஒரே நேரத்தில் கிரிக்கெட்டின் மூன்று வடிவங்களில் ஒவ்வொன்றிலும் சகலதுறை வீரருக்கான முதல் இடத்தைப் பிடித்தவர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

**கிரிக்கெட்டும் இந்திய அரசியலும்:**

இந்தியாவில் கிரிக்கெட்டில் இருந்து அரசியலுக்கு வந்த வீரர்கள் இன்னமும் பல பதவிகளில் உள்ளனர். முன்னாள் கப்டன் முகமது அசாருதீன் 2009 ஆம் ஆண்டில், காங்கிரஸில் சேர்ந்து தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். 2009 பொதுத் தேர்தலில் உத்தர பிரதேசத்தின் மொராதாபாத்தில் அசார் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் மன்சூர் அலி கான் பட்டோடி அரசியலில் நுழைந்து பதவிக்கு வந்த முதல் கிரிக்கெட் வீரர்களில் ஒருவர்.

இந்தியாவின் சிறந்த கிரிக்கெட் கப்டன்களில் ஒருவரான இவர், இரண்டு மக்களவைத் தேர்தல்களில் போட்டியிட்டார். ஆனால் இரண்டு முறையும் தோல்வியடைந்தார். இதனால் அரசியலில் இருந்து பின்னர் வெளியேறினார்.







**நவ்ஜோத் சிங் சித்து பஞ்சாபில்:**

2004ல் பாஜக சார்பில் மக்களவைக்கு போட்டியிட்டு பஞ்சாப் அரசில் அமைச்சராக இருந்த நவ்ஜோத் சிங் சித்து, தனது அரசியல் வாழ்க்கையை தொடங்கினார். இந்தியாவுக்காக 51 டெஸ்ட் மற்றும் 136 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள சித்து, பின்னர் காங்கிரஸில் சேர்ந்தார்.

இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங், பஞ்சாபி மாநிலங்களவை உறுப்பினர் ஆவார். மார்ச் 2022-ல், அவர் ஆம் ஆத்மி கட்சியில் சேர்ந்தார். டெஸ்ட் போட்டிகளில் 400 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 236 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 269 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இரண்டு டெஸ்ட் சதங்கள் மற்றும் ஒன்பது அரை சதங்களும் அடித்திருக்கிறார்.

1000 டெஸ்ட் ரன்களை அதிவேகமாக எடுத்த இந்திய டெஸ்ட் கிரிக்கெட் வீரர் வினோத் காம்ப்ளி. அவரது துணிச்சலான ஆட்டத்திற்கு பெயர் பெற்றவர்.








1993-ல் ஜிம்பாப்வேக்கு எதிராக அவர் 227 ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்தார். அவர் லோக் பாரதி கட்சியின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் 2009 விதானசபா தேர்தலில் விக்ரோலி (மும்பை) தொகுதியில் தோற்கடிக்கப்பட்டார்.

**2023 உலக கோப்பை போட்டியில் கட்சித் தலையீடு:**

நடந்து முடிந்த 2023 உலக கிரிக்கெட் போட்டியை மிக முக்கியமான அரசியல் ஆயுதமாகவே பா.ஜ.க. அரசு பார்த்தது. ஐந்து மாநிலத் தேர்தல் நடந்து கொண்டிருந்தபோது நடந்த இந்த உலகக் கோப்பை இறுதிப்போட்டி இந்தி பேசும் மாநிலங்களில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி, தேர்தலில் வாக்குகளாக மாறி அது பா.ஜ.க.வின் வெற்றிக்கு உதவும் என அவர்கள் கணக்குப் போட்டார்கள்.





உலக கிரிக்கெட் போட்டியை கிரிக்கெட் போட்டியைக் காண ஒட்டுமொத்த மத்திய அமைச்சரவையே மைதானத்தில் வந்து அமர்ந்திருந்தது. பா.ஜ.க. எம்.பி.க்கள் அனைவரும் அகமதாபாத்தில் குவிந்தார்கள். உண்மையில் பா.ஜ.க.வின் கட்சி மாநாடு போலவே கிரிக்கெட் மைதானம் மாறியிருந்தது.

இந்த உலகக் கோப்பைப் போட்டியின் தொடக்கத்தில் இருந்தே இந்தியாவின் அனைத்து மைதானங்களிலும் ‘ஜெய் சிறிராம்’ என்கிற கோஷம் ஓங்கி ஒலித்தது.

இந்தப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றவுடன் இந்திய வீரர்களுக்கு வரவேற்பு என்ற பேரில் இந்தியா முழுவதும் வெற்றிக் கோப்பையுடன் அவர்களை ஊர்வலமாக அழைத்துச் செல்ல ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஆடம்பர வெற்றி ஊர்வலத் திட்டங்களை பா.ஜ.க. திட்டமிட்டிருந்தது. ஆயினும் இந்திய அணியின் தோல்வி அனைத்து திட்டங்களையும் தவிடுபொடியாக்கியது.

அத்துடன் வெற்றிக் கோப்பையை பிரதமர் நரேந்திர மோடி விஸ்வரூபம் எடுத்த அயோத்தி ராமன் கைகளில் தரையில் மண்டியிட்டு சமர்ப்பணம் செய்வது போன்ற படங்கள் வெளியிடப்பட்டதும் அறிந்ததே.

**பாகிஸ்தான் அரசியலில் இம்ரான் கான்:**

ஒரு வெற்றிகரமான கிரிக்கெட் வீரராக வலம் வந்து





பல நாட்டு வீரர்களை தனது ஆட்டத்தால் கதிகலங்க வைத்த பாகிஸ்தானின் இம்ரான் கான், இன்று தனது சொந்த நாட்டில் அரசியல் முக்கியமானவராக உள்ளார்.

கபில்தேவ், கவாஸ்கர், சச்சின், பிரைன் லாரா, விவியன் ரிச்சர்ட்ஸ் போல் அந்த காலத்திலேயே கிரிக்கெட்டில் ஒரு கலக்கு கலக்கியவர். சுமார் இருபது ஆண்டுகாலம் அதாவது 1971 முதல் 1992 வரை பாகிஸ்தான் அணிக்காக ஆடிய இம்ரான் கான் அந்த கால கட்டத்தில் ஒரு தலை சிறந்த வீரராவார்.

1992ஆம் ஆண்டு கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற போதும், பாகிஸ்தானின் தனிப்பெரும் நட்சத்திரமாக உயர்ந்த இம்ரான் கான், 1996ஆம் ஆண்டு பாகிஸ்தான் தெஹ்ரீக் இன்சாஃப் என்ற கட்சியை தொடங்கினார். பாகிஸ்தான் அரசியல் களத்தில் இம்ரான் கான் சாதிப்பார் என்ற எதிர்பார்ப்பு எழுந்த போது முதல் தேர்தலில் அவரும், அவரது கட்சியும் படுதோல்வியை சந்தித்தது. 2002ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுதேர்தலில் தான் இம்ரான் கான் எம்பியாக தேர்வானார். அதன் பின்னர் அவர் பிரதமராகி இன்று தனது சொந்த நாட்டு சிறையில் அடைக்கப்படுள்ளார்.

**இலங்கை கிரிக்கெட்டில் புதிய சட்டம்:**

கிரிக்கெட் தொடர்பில் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய சட்டத்தின் மூலம் இடைக்கால குழுக்கள் மற்றும் அமைச்சரின் அதிகாரங்கள் நீக்கப்படும் என இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் தெரிவித்துள்ளார்.





கடந்த காலங்களில் படு தோல்வி அடைந்து வரும் இலங்கையின் கிரிக்கெட் அணியின் விளையாட்டை அரசியலுக்கு அப்பாற்பட்டு பேணுவதே தமது நோக்கம் எனவும் அதிபர் கூறியுள்ளார்.

2030ஆம் ஆண்டு இலங்கையின் கிரிக்கெட் இருப்பிடம் தொடர்பில் தமக்கு தொலைநோக்குப் பார்வை உள்ளதெனவும், இதனாலேயே பட்ஜட்டில் 1.5 பில்லியன் ரூபாவை பாடசாலை கிரிக்கெட்டின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணிக்காக எதிர்காலத்தில் அதனை வருடாந்தம் 2 பில்லியன் ரூபாய் வரை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் நிதி நிர்வாகத்தையும், பாடசாலை கிரிக்கெட்டின் அபிவிருத்தியையும் சுயாதீன நிதியம் ஒன்றிடம் ஒப்படைக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், சகல செயற்பாடுகளையும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுத்து, எதிர்பார்த்த இலக்குகளை அடைவதே தமது எதிர்பார்ப்பாகும் எனவும் அதிபர் ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# நல்லிணக்கத்தின் ஊடாக அபிவிருத்தியை அடைவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்

## தேசிய சர்வமத மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு.

இனவாதம் மற்றும் மதவாதத்தை ஒதுக்கிய, உலகின் அனைத்து நாடுகளும் விரைவான அபிவிருத்தியை அடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நல்லிணக்கத்தின் ஊடாக அபிவிருத்தியை அடைவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

இனவாதமும் மதவாதமும் அரசியல்வாதிகளுக்கு அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் மதத் தலைவர்கள் தமது பதவிகளில் நீடிப்பதற்கும் குறுகிய வழியாக மாறியுள்ளதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நீண்ட கால கசப்பான அனுபவமானது நாட்டைப் பயங்கரமான போருக்கு இழுத்துச் சென்றதையும் நினைவு கூர்ந்தார்.

எனவே நாட்டில் நல்லிணக்கத்தையும் மத நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதற்காக அரசாங்கம் பல சாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (28) நடைபெற்ற “நல்லிணக்கத்துக்கான மதங்கள்” தேசிய சர்வமத மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

17 மாவட்டங்களை உள்ளடக்கி 3 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்ட “மோதல்களைத் தவிர்ப்பதற்கான பன்முக நடவடிக்கைகள்” திட்டத்தின் நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த சர்வமத மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வின் போது மாவட்ட பிரதிநிதிகள் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதிலளித்தார்.

மாநாட்டில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் கூறியதாவது:

மதத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் உள்ள தொடர்பை நாங்கள் நன்கு அறிவோம். எங்களுக்கு இனவாதம் மற்றும் மதவாதம் பற்றிய அனுபவம் உள்ளது. இதன் விளைவாக, நாங்கள் ஒரு பயங்கரமான போரை எதிர்கொண்டோம். யுத்தம் முடிவடைந்த பின்னர் சகவாழ்வு தொடர்பில் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் அனைத்து மதத் தலைவர்களுக்கும் பெரும் பொறுப்பு உள்ளது. நம் எண்ணங்களில் கவனம் செலுத்த வேண்டும். அரசியல்வாதிகளின் எண்ணம் அதிகாரத்தைப் பெறுவதிலே உள்ளது. அந்தந்த இடங்களில் இருக்க வேண்டும் என்பதே மதத் தலைவர்களின் சிந்தனை. இதற்கெல்லாம் குறுக்கு வழி இனவாதம் மற்றும் மதவாதமாகும். 1930 முதல் நம் நாட்டில் இது நடந்து வருகிறது. இறுதி முடிவு என்ன என்பதை நான் குறிப்பிடத் தேவையில்லை.

உதாரணமாக, சிங்கப்பூரில் இனவாதமோ மதவாதமோ இல்லை. பல மொழிகள் பேசுவோர் இருந்தாலும், சிங்கப்பூர் இன்று துரித வளர்ச்சியை அடைந்துள்ளது.

தற்போது யுத்தம் இல்லாததால் நாட்டின் அரசியல் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படுகின்றது. எனவே சகவாழ்வில் கவனம் செலுத்த வேண்டும். இதுபற்றி பாராளுமன்றத்திலும் ஆராய்ந்து வருகிறோம். இலங்கையில் தேசிய மற்றும் மத சகவாழ்வை உறுதிப்படுத்தும் குழுவின் தலைவராக கரு ஜயசூரிய செயற்பட்டார். 2018 மார்ச்சில் முஸ்லிம்கள் தொடர்பான மோதல்கள், 2017 இல் காலியில் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் 2014 இல் பேருவலயில் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பில் மேற்படி குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இந்தத் தெரிவுக் குழுக்களால் பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. அந்த முன்மொழிவுகளை நாங்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டோம். நாங்கள் ஒரு குழுவாக இணைந்து பணியாற்றினோம். அப்படியானால், அந்த உடன்பாட்டின் படி நாம் நடக்க வேண்டும்.

கடந்த ஆண்டு இறுதியில் பல பௌத்த மதத் தலைவர்கள் மற்றும் தமிழ் தலைவர்கள் இமயமலைப் பிரகடனத்தை கையளித்தனர். அந்த அறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு வருகிறோம். தற்போது நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான கடைசிப் பகுதியில் இருக்கிறோம். குறிப்பாக தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் எம்.பி.க்களுடன் இது குறித்து ஆலோசித்து வருகிறோம். எஞ்சியுள்ள பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும். காணாமற் போனோர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் எதிர்வரும் காலங்களில் அறிவிப்போம். மேலும், இது தொடர்பாக சிறையில் இருந்த சிலரை விடுவிக்கவும்




**கடந்த இரண்டு ஆண்டுகளில், நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் பல சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நல்லிணக்கத்தை நோக்கிய பயணத்தில் மதத் தலைவர்களுக்கான பரந்த அளவிலான பணியுள்ளது.**




ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதே இப்போதுள்ள பிரதான கேள்வியாகும்.இதற்காக, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைப்பதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளோம். காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழுவின் பல அறிக்கைகள் உள்ளன. அவை தொடர்பில் ஆராய்ந்து நீதிபதி ஏ.எச்.எம்.டி. நவாஸிடமிருந்து தனியொரு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் வரைவை நாங்கள் நிறைவேற்றிய பின்னர், தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா இந்த வேலைத் திட்டங்களுக்கு தனது ஆதரவை வழங்குவதாக அறிவித்தார். ஏனைய நாடுகளிடமிருந்தும் அதற்கான உதவிகள் கிடைக்கின்றன. அதற்கமையவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன் பின்னர் அரசியல் பிரச்சினைகள் உள்ளன. காணிப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். யாழ்ப்பாணம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வசிக்கும் கிராம மக்களுக்கும் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. வவுனியா, திருகோணமலை, பொலன்னறுவை, மஹியங்கனை உள்ளிட்ட பிரதேசங்களிலும் இவ்வாறான பிரச்சினைகள் உள்ளன.

அனைத்து தரப்பினரையும் அழைத்து, இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வைத் தேட எதிர்பார்க்கிறோம். 1985 வரைவின்படி செயற்படுமாறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன். மேலும், அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் தமிழ் கட்சிப் பிரதிநிகளைச் சந்தித்து இது குறித்து கலந்துரையாடவுள்ளேன். பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடியதன் பின்னர் மேலும் பல காணிகளை விடுவிக்க இணக்கம் தெரிவித்துள்ளனர். இதே முறையில் முன்னோக்கிச் செல்ல முடியும்.

அடுத்த பிரச்சினை அதிகாரப் பகிர்வு. அதற்குள் அதிகாரப் பகிர்வின் 13ஆவது பட்டியலின் அதிகாரங்களை வழங்குவதே இங்கு முதன்மையான கோரிக்கையாகும். பொலிஸ் அதிகாரத்தில் நாம் தலையிடப் போவதில்லை. அதனைப் பின்னர் பார்க்கலாம். காணிச் சட்டத்தை சமர்பிக்க வேண்டும். மேலும், 13ஆவது பட்டியலில் உள்ள மற்ற விடயங்களை வழங்குவதில் எமக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை. அதற்காக மற்றைய கட்சிகளுடன் கலந்துரையாடி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு பாராளுமன்றத்தில் ஏனைய கட்சிகளுடன் இணக்கம் எட்டப்பட்டு வருகிறது.

அதேவேளை, மாகாண கல்விச் சபையை நடைமுறைப்படுத்துவது குறித்தும் தற்போது கலந்துரையாடி வருகின்றோம். ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாண தொழில் பயிற்சி நிலையங்களை நிறுவ எதிர்பார்க்கிறோம். சுற்றுலா சபை, விவசாய நவீன மயப்படுத்தலுக்கான மாகாண மட்ட குழுக்களை நியமிக்கவும் எதிர்பார்க்கிறோம்.

அத்துடன், இருபது அமைச்சுகள் செய்ய வேண்டிய பணியை 05 மாகாண அமைச்சுக்களின் கீழ் செய்ய முயற்சிக்கிறோம். இதன்போது, சாதாரணமான முறையில் செயற்பட முடியாது. எனவே அதற்கேற்றவாறு முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தவே முயற்சிக்கிறேன்.

அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்த பின்னர் வரவு செலவு திட்டத்தின் ஊடாக பண்முகப்படுத்தப்பட்ட நிதி தொடர்பிலான செயற்பாடுகளை முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம். அதேபோல் செனட் சபை தொடர்பிலான கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதனை அரசாங்கம் புறக்கணிக்கவில்லை. ஆனால் அரசியலமைப்பு உருவாக்கப்படும் போதே அதனை செய்ய முடியும். அதற்காக சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டிய அவசியமும் ஏற்படலாம். அது தொடர்பில் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாட எதிர்பார்க்கிறேன்.

அதனுடன் நாட்டுக்குள் புதிய சூழலைக் கட்டமைக்க வேண்டும். இந்த விடயத்தில் பெரும் பொறுப்புகள் மதத் தலைவர்களைச் சார்ந்துள்ளன. இந்த விடயங்கள் தொடர்பில் மேலும் கலந்துரையாடி சாத்தியமான பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என நம்புகிறேன்.” என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

மகா சங்கத்தினர் தலைமையிலான மதத் தலைவர்கள், முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் கலாநிதி பெலிக்ஸ் நியூமன், இலங்கைக்கான தென் ஆபிரிக்க உயர்ஸ்தானிகர் சென்டல் எட்வின் சல்க், ஐரோப்பியச் சங்கத்தின் உதவித் தலைவர் யொஹான் ஹெஸ் உள்ளிட்டவர்களும், தூதரக பிரதிநிதிகள், காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் மஹேஷ் கட்டுலந்த, மாற்றுக் கொள்கைக்கான கேந்திர நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து, இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் கலாநிதி ஜோ விலியம் உள்ளிட்ட அதிகாரிகள், “மோதல்களைத் தவிர்ப்பதற்கான பன்முக நடவடிக்கைகள்” வேலைத் திட்டத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான சாந்தன் உயிரிழந்தார்!

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு, சிறையிலிருந்து விடுதலையான சாந்தன் சென்னை மருத்துவமனையில் காலமானார். அவருக்கு வயது 55. கல்லீரலில் ஏற்பட்ட பிரச்சனைக்காக அவர் சிகிச்சைபெற்றுவந்தார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு, தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர் சாந்தன் என்ற சுதேந்திரராஜா. இவருக்கு விதிக்கப்பட்டிருந்த தூக்குத் தண்டனை நீண்ட காலமாக நிறைவேற்றப்படாத நிலையில், கடந்த 2022-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இவரையும் இதே வழக்கில் தண்டிக்கப்பட்டிருந்த நளினி, முருகன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகியோரையும் இந்திய உச்ச நீதிமன்றம் விடுவித்தது.

இதில் நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர் இந்தியக் குடிமக்கள் என்பதால் அவரவர் வீடுகளுக்குச் சென்றனர். முருகன், ஜெயக்குமார், சாந்தன், ராபர்ட் பயஸ் ஆகியோர் இலங்கை குடிமக்கள் என்பதால் அவர்கள் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர்.

தங்களுக்கு தற்காலிக பயண ஆவணங்களை வழங்கி, தங்களை விரும்பும் நாடுகளுக்கு அனுப்ப வேண்டுமென நால்வரும் கோரிவந்தனர்.

32 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாந்தனுக்கு பல உடல்நல பிரச்சனைகள் இருந்தன. குறிப்பாக கல்லீரலில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இதையடுத்து சிகிச்சைக்காக அவர் திருச்சியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

ஆனால், அவரது உடல்நிலை தொடர்ந்து மோசமடையவே, அவர் சென்னையில் உள்ள ராஜீவ் காந்தி அரசு தலைமை மருத்துவமனையில் கடந்த ஜனவரி 27-ஆம் தேதி சேர்க்கப்பட்டார். இந்த நிலையில், புதன் காலையில் அவருக்கு இதயத் துடிப்பு முடக்கம் ஏற்பட்டு, உயிரிழந்தார்.

### எப்படி உயிரிழந்தார் சாந்தன்?

இது குறித்து ஊடகங்களிடம் பேசிய ராஜீவ் காந்தி அரசு தலைமை மருத்துவமனையின் டீன் தேரணிராஜன், "சாந்தனுக்கு கல்லீரல் செயலிழப்பு ஏற்பட்டிருந்தது. இதனால் அவருக்கு கல்லீரல் சிகிச்சை பிரிவில் மருத்துவர் பிரேம்குமார் தலைமையில் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது," என்றார்.



"அவருக்கு **Cryptogenic cirrhosis** பிரச்னை ஏற்பட்டிருந்ததால் அந்தப் பிரச்சனை ஏன் ஏற்பட்டது என்பதை அறிய முயற்சித்துவந்தோம்.

"கல்லீரல் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்ததால் சுயநினைவு இழப்பதும் இயல்பு நிலைக்கு திரும்புவது மாக இருந்தார். இந்த நிலையில் அவரது உடல் நிலையில் நேற்று இரவு (பிப்ரவரி 27) பெரும் பின்னடைவு ஏற்பட் டது.

"அவருக்கு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டது. அதிகாலையில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. தொடர்ந்து அளிக்கப்பட்ட சிகிச்சைகள் பலனளிக்காமல், அவர் உயிரிழந்தார்," என்று கூறினார்.

சாந்தன் தனக்கு தற்காலிக பயண ஆவணங்களைக் கோரிவந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழக்கிழமை, அதாவது பிப்ரவரி 23-ஆம் தேதியன்று வெளிநாட்டவருக்கான பிராந்திய பதிவு அலுவலகத்தில் இருந்து பயண ஆவணங்கள் வழங்கப்பட்டன. இதையடுத்து அவரை இலங்கைக்கு அனுப்புவதற்கான பணிகள் தீவிரமடைந்தன.

உடல்நலம் சரியானதும் அவர் இலங்கைக்கே திரும்பிச் செல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவருடைய உடல்நலம் தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்து, உயிரிழந்திருக்கிறார்.

### குற்றச்சாட்டு குறித்து சாந்தன் கூறிவந்தது என்ன?





ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் முக்கியக் குற்றவாளியாகக் கருதப்பட்ட சிவராசனின் உதவியாளராகச் செயல்பட்டவர் என்ற குற்றச்சாட்டில் சாந்தன் என்ற சுதேந்திரராஜா சி.பி.ஐயால் கைது செய்யப்பட்டார். கடந்த 1990-ஆம் ஆண்டு பிப்ரவரியில் இலங்கையிலிருந்து இந்தியா வந்த சாந்தன், கோடம்பாக்கத்தில் இருந்த மெட்ராஸ் இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் இஞ்சினீயரிங் டெக்னாலஜியில் படித்தார்.

இந்த காலகட்டத்தில் சிவராசனுக்காக ஈ.பி.ஆர்.எல்.எஃப். போராளிக் குழுவினரை உளவு பார்த்ததாக இந்தியப் புலனாய்வு அமைப்புகள் கூறின. பத்மநாபாவின் படுகொலைக்குப் பிறகு, இலங்கைக்குத் திரும்பிச் சென்ற சாந்தன், மீண்டும் இந்தியாவிற்கு திரும்பிவந்து ராஜீவ் காந்தியின் கொலையில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால், அடையாள மாறுபாட்டின் காரணமாகவே கைதுசெய்யப்பட்டதாக சாந்தன் தொடர்ந்து கூறிவந்தார்.

சாந்தன் விடுதலையான பிறகு, அவரை இலங்கைக்கு அனுப்ப முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அவரது தாயார் மகேஸ்வரி தொடர்ந்து கோரிக்கை விடுத்துவந்தார். இதுதொடர்பாக இலங்கை தமிழரசு கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரனும் கோரிக்கை வைத்திருந்தார்.

சாந்தனின் தாயார் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள், ஜனவரி 30-ஆம் தேதியன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, சாந்தனை இலங்கைக்கு வரவழைக்க ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர்.

சாந்தனின் குடும்பத்தினர் யாழ் மாவட்டம் உடுப்பிட்டியில் வசித்துவருகின்றனர். சாந்தனின் உடலை "எம்பாமிங்" செய்து இலங்கைக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டுவருவதாக வழக்கறிஞர் புகழேந்தி புதன் இரவு தெரிவித்திருந்தார்.

